# சிலாங்கூர்

இன்று இலவசம்

SMART SELANGOR

www.selangorkini.my Media_Selangor selangortv.my MediaSelangor

SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2051 / சார்வரி ஆண்டு தை மாதம் / பிப்ரவரி 2/2021 FEBRUARY 2/2021





# 7 சிலாங்கூர் மக்களுக்கு கோடியே

## 38 லட்சத்து 77 ஆயிரம் வெள்ளி

சிலாங்கூர் மாநிலப் பக்காத்தான் ஹராப்பான் அரசாங்கம் நாட்டின் மத்திய அரசாங்கத்துக்கும் மற்ற மாநில அரசுகளுக்கும் வழிகாட்டியாக விளங்கி வருகிறது என்பதற்குச் சான்றாக உள்ளது கோவிட் 19 நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் இலவசக் கோவிட் 19 சோதனைகள் போன்ற உதவித் திட்டங்கள். இந்த நோய் எதிர்ப்பு போராட்டத்தில் சொந்த மக்களுக்கு மட்டுமின்றி அவர்களுக்குச் சேவையாற்றி வரும் மருத்துவச் சிகிச்சையாளர்கள், பாதுகாவலர்களாகச் செயல் படும் போலீஸ், ரேலா, ராணுவத்தினர் போன்ற முன் களப்பணியாளர்களையும் மதித்து, அனைவரின் தேவைகளுக்கும் மானியம் ஒதுக்கியுள்ளது. சிலாங்கூரில் பொது முடக்கத்தால் பாதிக்கப்பட்ட குறைந்த வருமானத்தைக் கொண்ட பிரிவு மக்களையும், நோய்த் தொற்றுக்கு எதிராகப் போராடி வரும் முன்களப் பணியாளர்களுடன் மாநிலத்தின் ஒட்டு மொத்தப் பொருளாதாரத்தை மீட்சியுறச் செய்ய மீண்டும் 7 கோடியே 38 லட்சத்து 77 ஆயிரம் வெள்ளிகளை ஒதுக்கியுள்ளார் மாநில மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி. ஆரம்பத்திலேயே சரியான இலக்கை அடையாளம் காணத் தவறியதால், நோய் தாக்கத்தின் கடுமையில் மக்கள் சிக்கிவிட்டனர். அது இம்மாநில மக்களின் வாழ்வாதாரத்தை மட்டும் பாதிக்காமல், முதலீட்டு சூழ்நிலைகளையும் வெகுவாகப் பாதித்துள்ளது. நாட்டிற்கு அதிக வருமானத்தை ஈட்டி தந்தச் சிலாங்கூரை மீண்டும் அதன் உன்னத நிலைக்கு உயர்த்த அரும் பாடுபட்டு வரும் மாநில அரசு, எந்தெந்தத் துறைகளுக்கு எவ்வளவு ஒதுக்கியுள்ளது என்பதனை '' கித்தா சிலாங்கூர் '' நாம் சிலாங்கூர் என்னும் பொருள்படப் பக்கம் 8 மற்றும் 9 பதில் விரிவாகப் பார்க்கலாம்.


விரிவான செய்திகளை பக்கம் 8 மற்றும் 9இல் காணலாம்

# சிலாங்கூரில் கோவிட்-19 ஆகக்கடைசி நிலவரங்கள்



ஷா ஆலம் :-சிலாங்கூரில் கோவிட்-19 நோய்த் தொற்றை கட்டுப்படுத்துவது தொடர்பில் தான் நேற்று இரவு (29 ஜனவரி 2021) மாநில பாதுகாப்பு மன்றக் கூட்டத்தை கூட்டியதாகவும், சிலாங்கூரில் அதிகரித்து வரும் கோவிட்-19 நோய்த் தொற்று எண்ணிக்கை குறித்து குறிப்பாக, சுகாதார அமைச்சு வெளியிட்ட அறிவிப்பு மற்றும் இந்நோய்த் தொற்றின் சங்கிலித் தொடர்பை துண்டிப்பது பற்றி விவாதிப்பதற்காக அந்த கூட்டம் நடத்தப்பட்டது என மாண்புமிகு டத்தோ ஸ்ரீ அமிடின் ஷாரி சிலாங்கூர் மந்திரி புசார் கூறினார்.

இதன் தொடர்பில் விளக்கமளித்த சிலாங்கூர் மாநில சுகாதாரத் துறை, நோய்த் தொற்று எண்ணிக்கை அதிகரிப்புக்கு பல அம்சங்கள் முக்கிய காரணமாக விளங்குவதாக தெரிவித்தது.

நேரடியாகவும் உடனடியாகவும் தெரிவிக்கப்படாத தொழிற்சாலை ஊழியர்கள், சிறைச்சாலைகள், கிளினிக்குகள் மற்றும் தனியார் மருத்துவமனைகளில் நடத்தப்பட்ட சோதனைகளில் கண்டறியப்பட்ட பழைய பின் சேர்ப்பு சம்பவங்களும் இதில் அடங்கும் என்றும் 10 நாட்களுக்கு முன் நடந்த சம்பவங்களின் வாயிலாகத் தான் இந்த பின் சேர்ப்பு சம்பவங்களை அடையாளம் காண முடியும் என்றும் கூறியது.

# கோவிட்-19 நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்துவதில் ஒத்துழைப்பு: சிலாங்கூர்-மத்திய அரசு இணக்கம்




ஷா ஆலம் - கோவிட்-19 நோய்த் தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதில் ஒன்றிணைந்து செயல்பட சிலாங்கூர் அரசும் மத்திய அரசும் இணக்கம் கண்டுள்ளன.

தேசிய பேரிடர் தயார் நிலை மற்றும் அதிரடி நடவடிக்கை மையத்தில் சிலாங்கூர் மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி மற்றும் சுகாதார அமைச்சர் டத்தோ ஸ்ரீ ஆடாம் பாபா ஆகியோருக்கிடையே நடைபெற்ற சந்திப்பில் இந்த இணக்கம் காணப்பட்டது.

இந்த சந்திப்பில் கோவிட்-19 நோய்த் தொற்று, தற்காலிக இடமாற்ற மையம், தரவு பரிமாற்றம், மாநில அரசு நிறுவனங்களுடன் ஒத்துழைப்பு ஆகிய விவகாரங்கள் குறித்து பேசப்பட்டதாக அமிருடின் ஷாரி கூறினார்.

நம்முடன் இணைந்து செயல்படுவதற்கு அமைச்சரும் அவரது குழுவினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர். தரவுகளை மறைக்காமல் முழுமனதுடன் ஒன்றுபட்டு செயல்படுவதற்கான வாய்ப்பு இதன் மூலம் கிடைத்துள்ளது என்றார் அவர்.

# பி.கே.பி. விதிமுறைகளை மீறுவோர் மீது பிப். 4ஆம் தேதி முதல் கடும் நடவடிக்கை




கோலாலம்பூர் - நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையை மீறுவோர் மீது இம்மாதம் 4ஆம் தேதிக்குப் பின்னர் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாதுகாப்புக்கான முதன்மை அமைச்சர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் எச்சரித்துள்ளார்.

நாட்டில் கோவிட்-19 பெருந்தொற்று சம்பவங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால் இவ்விவகாரத்தில் இனியும் விட்டுக் கொடுக்கும் போக்கு கடைபிடிக்கப்படாது என்று அவர் சொன்னார். நாட்டில் குறிப்பாக தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானப் பகுதிகள் சம்பந்தப்பட்ட கோவிட்-19 சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அவர் கூறினார். நாட்டில் கோவிட்-19 சம்பவங்கள் அபரிமிதமாக உயர்வு காண்பதற்கு கட்டுமானம் மற்றும் தொழிற்சாலைகள் முக்கிய காரணமாக விளங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார். சீரான செயலாக்க நடைமுறைகளை பின்பற்றுவது மற்றும் கிடைக்கப்பெறும் தகவல்களின் அடிப்படையில் உடனடி நடவடிக்கை எடுப்பது போன்ற காரணங்களால் காலைச் சந்தை தொற்று மையம் மற்றும் சாலையோர அங்காடி வியாபார தொற்று மையம் தோன்றவில்லை என்றார் அவர். தங்களிடம் வேலை செய்யும் அனைத்து அந்நியத் தொழிலாளர்களுக்கும் இன்று தொடங்கி கோவிட்-19 சோதனையை மேற்கொள்ளும்படி அவ்விரு துறைகளையும் சேர்ந்த முதலாளிகள் பணிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதற்கு முன்னர், ஆறு மாநிலங்களைச் சேர்ந்த அந்நியத் தொழிலாளர்களுக்கு மட்டுமே கட்டாய கோவிட்-19 சோதனை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டிருந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

அந்நியத் தொழிலாளர்களால் உள்நாட்டினருக்கும் கோவிட்-19 நோய்த் தொற்று பரவும் சாத்தியம் உள்ளதால் அவர்களின் உடலாரோக்கியத்தை தொடர்ந்து கண்காணிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக அவர் சொன்னார்.

நோய்த் தொற்று அதிகரிப்புக்கு அந்நியத் தொழிலாளர்களுக்கான குடியிருப்பும் முக்கிய காரணமாக உள்ளதால் இவ்விவகாரம் தொடர்பில் அவசர காலச் சட்டம் திருத்தப்படவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

# மாணவர்களின் ஞாபக பலத்தை வைத்து திறமையை அளப்பதிலிருந்து கல்வி அமைச்சு விடு படுமா?



கோலாலம்பூர் :- கோவிட் -19 நோய்த்தொற்று அச்சுறுத்தல் காரணமாக மாணவர் மதிப்பீட்டு முறை மறு ஆய்வு செய்யப் பட வேண்டுமா? கடந்த ஆண்டு மார்ச் மாதம் கோவிட் -19 தொற்றுநோய் காரணமாக முதல் நடமாட்டக் கட்டுப்பாடு ஆணை (பி.கே.பி) அமல்படுத்தப் பட்டதிலிருந்து, கல்வித்துறை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது மற்றும் அத்துறைக்குத் தொடர்பான பிரச்சினைகள் இன்று வரை குறையவில்லை.

கோவிட் -19 அச்சுறுத்தல் காரணமாக, கல்வி அமைச்சு (MOE) கடந்த ஆண்டு இரண்டு முக்கியத் தேர்வுகளை ரத்து செய்தது, அதாவது 6 ஆம் ஆண்டுக்கான தொடக்கப்பள்ளி சோதனை (யுபிஎஸ்ஆர்) மற்றும் படிவம் மூன்று மதிப்பீட்டு தேர்வு (PT3) .இந்த இரண்டு தேர்வுகளையும் (யுபிஎஸ்ஆர் மற்றும் பிடி 3) ரத்து செய்வதற்கான ஆலோசனைகள் நோய் தொற்று காலத்திற்கு முன்பே முன்வைக்கப் பட்டதுதான், ஆனால் பெற்றோரின் ஆட்சேபணை உட்படப் பல்வேறு எதிர்ப்புகளைக் கவனத்தில் கொண்டு இது புறம் தள்ளப்பட்டது, கடந்த ஆண்டு இறுதியில் நடைபெறவிருந்த சிஜில் பெலஜாரன் மலேசியா (எஸ்.பி.எம்), சிஜில் பெலஜாரன் வோகேஷனல் மலேசியா (எஸ்.பி.வி.எம்), சிஜில் திங்கி அகமா மலேசியா (எஸ்.டி.ஏ.எம்) மற்றும் சிஜில் திங்கி பெர்செகோலாஹான் மலேசியா (எஸ்.டி.பி.எம்) 2020 தேர்வுகளையும் கோவிட் -19 பாதித்தது. அதனால், அவைகள் இந்த ஆண்டின் தொடக்கத்திற்கு ஒத்திவைக்கப் பட்டன.

இந்தப் பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் தொடங்கி முக்கியமான தேர்வுக்குக் கிட்டத்தட்ட 500,000 எஸ்பிஎம், எஸ்பிவிஎம், ஸ்டாம் மற்றும் 47,008 எஸ்.டி.பி.எம் மாணவர்கள் அமர்வார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இப்போது என்ன நடக்கிறது, கல்வி, கோவிட் -19 ஆல் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சிலர் நினைக்கிறார்கள். முன்னர் மாணவர்களின் திறனை மதிப்பிடுவதற்கான முதன்மை வழிமுறையாகத் தேர்வுகள் விளங்கின. ஆனால் இப்பொழுது, முதன்மை முதல் இடைநிலை பள்ளி மாணவர் மதிப்பீட்டு வரைக்குமான மாற்றங்களுக்கான தொடக்கப் புள்ளியாக இந்தத் தொற்றுநோய் விளைவு இருக்கலாம்.

கல்வியாளர்கள் உட்படச் சில தரப்பினரின் பரிந்துரைகள், குறிப்பாகக் கல்வி முறை இனித் தேர்வு முறையைப் பார்ப்பதில்லை, மாறாக மாணவர்களின் திறமைகளையும் சுயாதீனமான தேவைகளையும் ஆராய்கிறது. "நல்ல மற்றும் தர மதிப்பீடு மற்ற வடிவங்களில் செயல்படுத்தப்படலாம். இந்த விஷயத்தை ஆராய்வதில் தேர்வு வாரியம் இன்னும் வெளிப்படையாக இருக்க வேண்டும். பாரம்பரியச் சிந்தனை அம்சத்தில் நாம் நீண்ட காலமாக இருந்ததால், இன்று நிகழும் தற்போதைய மாற்றங்களுக்கு ஏற்பப் புதிய சிந்தனை மிகவும் தேவைப் படுகிறது, "என்று அவர் சமீபத்தில் பெர்னாமாவிடம் கூறினார்.

அனுபவத்தின் அடிப்படையில் உண்மையில் பின்தங்கியுள்ள பரீட்சைகளின் வடிவத்தில் நாம் இனிக் காத்திருக்க முடியாது என்ற ஒரு பாடத்தை இந்தத் தொற்றுநோய் அளிக்கிறது என்று அவர் விளக்கினார்.

மாணவர்களின் மதிப்பீடு உடல், உணர்ச்சி, ஆன்மீகம், அறிவுசார் மற்றும் சமூகமயம் ஆகியவற்றை உள்ளடக்கிய உயர் மட்டச் சிந்தனைக்குப் பல்வேறு அம்சங்களில் இருக்க வேண்டும். படைப்பாற்றல், விஞ்ஞான மற்றும் உயர் மட்டச் சிந்தனையின் இந்தக் கூறுகள் பாலர் மட்டத்தில் விளையாட்டுகள் உள்ளிட்ட சுவாரஸ்யமான முறைகள் மூலம் கூடிய விரைவில் நிறுவப்பட வேண்டும் என்று மொஹமட் அலி கூறினார்.

# சிலாங்கூர் மாநில அரசாங்க

## செயலாளராக நோர் அஸ்மி நியமனம்



ஷா ஆலம் — சிலாங்கூர் மாநில அரசாங்கச் செயலாளராக டத்தோ நோர் அஸ்மி டிரோன் நியமிக்கப்பட்டுள்ளார். அவரது நியமனம் 3ம் தேதி அமலுக்கு வருகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளாக இப்பதவியை வகித்து வந்த டத்தோ முகமது அமின் அகமது ஆஹ்யா இன்றுடன் பதவி ஓய்வு பெறுவதைத் தொடர்ந்து நோர் அஸ்மின் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசாங்கச் செயலாளர் பதவி ஏற்றிருக்கும் நோர் அஸ்மிக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்ட மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி, மாநிலத்தின் வளர்ச்சிக்கு அவர் முழுமையான பங்களிப்பை வழங்குவார் என நம்பிக்கைத் தெரிவித்தார்.

நோர் அஸ்மியின் நியமனத்திற்கு சிலாங்கூர் மாநிலம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது. மாநிலத்தின் வளர்ச்சிக்கு குறிப்பாக சிலாங்கூர் மாஜூ திட்டத்தை நனவாக்குவதற்கு முழு ஈடுபாட்டுடன் பாடுவார் என எதிர்பார்க்கிறோம் என்றார் அவர்.

அதே சமயம், நான்கு ஆண்டுகால சேவைக்குப் பின்னர் பதவி விலகும் டத்தோ அமினுக்கு தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார். மலேசிய தேசிய பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்ப நிர்வாகத் துறையில் இளங்கலைப் பட்டம் பெற்ற நோர் அஸ்மி, கடந்த 1995ஆம் ஆண்டில் நிர்வாக மற்றும் அரசதந்திர அதிகாரியாக நியமனம் பெற்றார். புறநகர் மற்றும் கூட்டரசு மேம்பாட்டுத்துறை அமைச்சு, தொழில்முனைவோர் மேம்பாட்டுத் துறை அமைச்சு மற்றும் பிரதமர் துறை அமைச்சு ஆகியவற்றில் பணியாற்றிய அனுபவத்தை அவர் கொண்டுள்ளார். சிலாங்கூர் மாநில பொருளாதார திட்டமிடல் பிரிவில் பணியாற்றிய அவர், கடந்த 2019ஆம் ஆண்டில் மாநில நிதி அதிகாரியாக நியமனம் பெற்றார்.

# தொற்றுநோய் தடுப்புச் சட்டத்

## திருத்த மசோதா- சுகாதார அமைச்சு தகவல்




கோத்தா பாரு — 1988ஆம் ஆண்டு தொற்றுநோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 342வது பிரிவில் திருத்தம் செய்வது தொடர்பான மசோதா சட்டத்துறைத் தலைவர் அலுவலகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை தலைமைச் செயலாளர் டான்ஸ்ரீ டாக்டர் நோர் ஹிஷாம் அப்துல்லா கூறினார். கடந்த 1988ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட அந்த 342வது சட்டப்பிரிவை நடப்புத் தேவைக்கேற்ப மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக அவர் சொன்னார். அச்சட்டப் பிரிவின் கீழ் ஆயிரம் வெள்ளியாக நிர்ணயிக்கப்பட்டுள்ள அதிகப்பட்ச அபராதத் தொகை உள்படப் பல்வேறு ஷரத்துகளில் திருத்தங்களை செய்ய வேண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். இந்த சட்டத் திருத்தத்தை செய்வதற்கு நடப்பிலுள்ள அவசர காலத்தை நாம் பயன்படுத்தவிருக்கிறோம் என்று இங்குள்ள கோவிட்-19 சிகிச்சை மற்றும் தனிமைப்படுத்தும் மையத்தை பார்வையிட்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார். நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட எஸ்.ஓ.பி. நிர்வாக நடைமுறைகளை பின்பற்றத் தவறுவோருக்கு விதிக்கப்படும் அபாரதத் தொகையை அதிகரிப்பதற்கான தருணம் வந்து விட்டதாக தேசிய போலீஸ் படைத் தலைவர் டான் ஸ்ரீ அப்துல் ஹமிட் படோர் கூறியிருந்தார். நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை கால எஸ்.ஓ.பி. விதிமுறைகளை பின்பற்றத் தவறிய காரணத்திற்காக குறிப்பாக கூடல் இடைவெளியைக் கடைபிடிக்கத் தவறியதற்காக வாரந்தோறும் ஆயிரக்கணக்கானோருக்கு குற்றப்பதிவுகள் வெளியிடப்படுவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

# சீனப்புத்தாண்டை முன்னிட்டு அதிகப்பட்ச விலை பட்டியலில்



புத்ரா ஜெயா – இவ்வாண்டு சீனப்புத்தாண்டை முன்னிட்டு விழாக்கால அதிகப்பட்ச விலை திட்டத்தின் கீழ் 16 வகை அத்தியாவசியப் பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. இத்திட்டம் இம்மாதம் 6ஆம் தேதி முதல் 16ஆம் தேதி வரை அமலில் இருக்கும். கோழி, கோழி முட்டை, காய்கறிகள், கடல் உணவு வகைகள், பன்றி இறைச்சி உள்ளிட்ட பொருள்கள் இந்த கட்டுப்படுத்தப்பட்ட பொருள் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் என்று உள்நாட்டு வாணிக மற்றும் பயனீட்டாளர் விவகார அமைச்சர் டத்தோஸ்ரீ அலெக்சாண்டர் நந்தா லிங்கி கூறினார். இம்மாதம் 12 ஆம் தேதி கொண்டாடப்படவிருக்கும் சீனப்புத்தாண்டை முன்னிட்டு அத்தியாவசிப் பொருள்கள் விலையேற்றம் காண்பதை தடுக்கும் நோக்கில் இந்த விழாக்கால அதிகபட்ச விலை திட்டம் அமல்படுத்தப்பட்டிருப்பதாக அவர் சொன்னார். நடமாட்ட கட்டுப்பாட்டு ஆணையை காரணம் காட்டி பொருள்களின் விலை உயர்த்தப்படுவதை தடுப்பதிலும் இத்திட்டம் மறைமுகமாக உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார். மேற்குறிப்பட்ட உணவுப் பொருள்கள் தவிர்த்து இறக்கமதி செய்யப்பட்ட முட்டைக்கோசு, சிவப்பு மிளகாய், பூண்டு, வெள்ளை இறால், தக்காளி, உருளைக்கிழங்கு ஆகியவையும் இந்த பட்டியலில் இடம் பெற்றுள்ளன என்றார் அவர். நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக இவ்வாண்டு சீனப்புத்தாண்டு சீரான நிர்வாக நடைமுறைகளைப் பின்பற்றி மிதமான அளவில் கொண்டாடப்பட்டாலும் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கான தேவை வழக்கத்தைக் காட்டிலும் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# பொழுது போக்கு மையங்களில் இவ்வாண்டு கேளிக்கை வரி விதிக்கப்படாது மந்திரி புசார் தகவல்



ஷா ஆலம் – பொழுது போக்கு மையங்களில் விதிக்கப்படும் நுழைவுக் கட்டணத்திற்கான கேளிக்கை வரியை செலுத்துவதிலிருந்து சிலாங்கூர் மாநில அரசு இவ்வாண்டு விலக்களித்துள்ளது. இந்த வரி விலக்களிப்பு வரும் மார்ச் மாதம் 18ஆம் தேதி முதல் டிசம்பர் 31ஆம் தேதி வரை அமலில் இருக்கும். நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்ட பொழுது போக்கு சார்ந்த துறைகளின் சுமையைக் குறைக்கும் நோக்கில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். இந்த வரி விலக்களிப்பு காரணமாக மாநில அரசுக்கு இவ்வாண்டு 2 கோடியே 63 லட்சத்து 50 ஆயிரம் வெள்ளி வருமான இழப்பு ஏற்படும் என்று அவர் சொன்னார். இது தவிர, 2022ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதி தொடங்கி ஐந்து ஆண்டுகளுக்கு அதாவது 2026ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் தேதி வரை கேளிக்கை வரி 25 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாக குறைக்கப்படும். இதனால் ஆண்டுக்கு 2 கோடியே 10 லட்சத்து 40 ஆயிரம் வெள்ளி வருமான இழப்பு ஏற்படும் என்றார் அவர். தொழில்துறை மற்றும் வர்த்தகத் துறை தொடர்ந்து தாக்குபிடிப்பதையும் தொழிலாளர்கள் குறிப்பாக சுற்றுலாத் துறையைச் சேர்ந்தவர்களின் வேலை வாய்ப்புக்கு உத்தரவாதம் கிடைப்பதையும் உறுதி செய்யும் நோக்கில் இந்த வரி விலக்கு அளிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். இந்த இக்கட்டான சூழலில் மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களை குறைப்பதற்கான வழி வகைகளை மாநில அரசு தொடர்ந்து ஆராய்ந்து வரும் என்று அவர் அறிக்கை ஒன்றில் கூறினார்.

# கிராமப்புற மக்களுக்கு 40,000 சிம் கார்டுகள்; மார்ச் மாதம் வழங்கப்படும்



ஷா ஆலம், ஜன 25- கிராமப் புறங்களைச் சேர்ந்த சுமார் 40,000 பேருக்கு இணைய சிம் கார்டுகள் வரும் மார்ச் மாதம் வழங்கப்படும். தரமான இணைய அலைவரிசையை கிராமப்புற மக்கள் பெறுவதை உறுதி செய்யவும் நோக்கில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். கல்வி மற்றும் வர்த்தக நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்த வகை செய்யும் இத்திட்டம், ராக்கான் டிஜிட்டல் இயக்கத்தின் வாயிலாக மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்நோக்கம் நிறைவேற்றம் காண்பதை உறுதி செய்வதற்காக சிலாங்கூர் மாநில மக்களுக்கான இணைய தரவு ஒருங்கிணைப்பு பணிகளை மாவட்ட அலுவலகங்களுடன் இணைந்து மேற்கொள்ளவுள்ளோம் என்றார் அவர். வரும் 2022 ஆம் ஆண்டிற்குள் சிலாங்கூர் மாநிலத்தின் உட்புறப்பகுதிகள் எதிர் நோக்கும் இணைய அடைவு நிலைப் பிரச்னைக்கு தீர்வு காணப்படும் என்றும் அவர் தெரிவித்தார். சிலாங்கூர் மாநில "மாநில விவேக" விநியோகப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் இத்திட்டம் முதல் கட்டமாக கோல சிலாங்கூரில் தொடங்கப்பட்டு விட்டதாகவும் இதர புறநகர்ப் பகுதிகளுக்கும் இது விரிவுபடுத்தும் என்றும் அவர் கூறினார். மாநிலத்தில் உள்ள 60 முதல் 70 விழுக்காடு பகுதிகள் அதிக ஆற்றல் கொண்ட இணைய வசதியை கொண்டுள்ளன. சில பகுதிகள் மட்டுமே 2ஜி அலைக்கற்றையை இன்னும் பயன்படுத்துகின்றன. இந்த அலைக்கற்றை மூலம் தகவல்களை மட்டும் அனுப்ப முடியும். ஆனால், காணொளிகளை அனுப்ப இயலாது என்றார் அவர்.

# சிலாங்கூரின் அனைத்து தொகுதிகளில் கோவிட்-19 பரிசோதனை இயக்கம்



ஷா ஆலம்- கோவிட்-19 பெருந் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக சிலாங்கூர் மாநிலத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் தொகுதிகளில் கோவிட்-19 பரிசோதனை இயக்கத்தை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் நோய்த் தொற்றின் தாக்கம் அதிகம் உள்ள இடங்களில் வசிக்கும் ஏழை மக்கள் கோவிட்-19 பரிசோதனையை மேற்கொள்வதற்குரிய வாய்ப்பு ஏற்படும் என்று சிலாங்கூர் மாநில அரசாங்க ஆதரவு கிளப் தலைவர் எலிசபெத் வோங் கூறினார்.

சுகாதாரத் துறைக்கான ஆட்சிக் குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட் அவர்களுடன் கடந்த வாரம் நடைபெற்ற சந்திப்பில் இவ்விவகாரம் குறித்து விவாதிக்கப்பட்டதாக புக்கிட் லஞ்சான் சட்டமன்ற உறுப்பினருமான அவர் சொன்னார்.

சட்டமன்ற உறுப்பினர்களின் பணியை எளிதாக்குவதற்கும் கோவிட்-19 பரிசோதனையின் ஆக்கத்தன்மையை அறிந்து கொள்வதற்கும் ஏதுவாக அந்நோய்த் தொற்று தொடர்பான தரவுகளை மத்திய அரசு மாநில அரசுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

குறைந்த பட்சம் 50 வெள்ளி கட்டணத்தில் கோவிட்-19 பரிசோதனையை மேற்கொள்ளும் திட்டத்தை எலிசபெத் வோங், சுங்கை பூலோ நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். சிவராசா, பெட்டாலிங் ஜெயா நாடாளுமன்ற உறுப்பினர் மரியா சின் அப்துல்லா ஆகியோர் கடந்த சனிக்கிழமையன்று தொடக்கினர்.

# குழாய்கள், மீட்டர்களை பழுதுபார்க்க 18.6 கோடி வெள்ளி ஒதுக்கீடு



ஷா ஆலம் — குழாய் உடைப்பு போன்ற காரணங்களால் பயனீட்டாளர்களை சென்றடைவதற்கு முன்பே வீணாகும் நீரின் அளவைக் குறைக்கும் பணிகளுக்காக ஆயர் சிலாங்கூர் நிறுவனம் இவ்வாண்டில் 18 கோடியே 60 லட்சம் வெள்ளியை ஒதுக்கீடு செய்துள்ளது. இத்தொகையில் 17 கோடி வெள்ளி பழைய குழாய்களை பழுது பார்ப்பதற்கும் 1 கோடியே 60 லட்சம் வெள்ளி பழைய மற்றும் பழுதடைந்த மீட்டர்களை மாற்றுவதற்கும் பயன்படுத்தப்படும் என்று ஆயர் சிலாங்கூர் நிறுவனத்தின் தலைமை செயல்முறை அதிகாரி சுஹாய்மி கமாருள்ஸமான் கூறினார்.

குழாய் உடைப்பை முன்கூட்டியே கண்டறிவதற்கு ஏதுவாக 3,000 விஷேச உபகரணங்கள் முக்கிய குழாய்களில் பொருத்தப்படும். இது தவிர, 60 மாவட்ட மீட்டர் மண்டலங்களில் நிரந்தர குழாய் கசிவு கண்டுபிடிப்பு கருவிகள் பொருத்தப்படும் என்றார் அவர்.

பழைய குழாய்களை மாற்றும் திட்டத்தின் கீழ் 150 கிலோமீட்டர் தொலைவுக்கு அஸ்பேஸ்டோஸ் சிமெண்ட் குழாய்களுக்கு பதிலாக புதிய குழாய்கள் பொருத்தப்படும் என்றும் அவர் சொன்னார்.

ஆயர் சிலாங்கூர் நிறுவனத்தின் இந்த முயற்சி வெற்றியடைவதை உறுதி செய்வதற்காக குறைந்தது 78,000 குழாய் கசிவு சம்பவங்களை குழாய் கசிவு சோதனை நிபுணர்கள் கண்டறிய வேண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். வீணாகும் நீரின் அளவை வரும் 2025ஆம் ஆண்டில் 25 விழுக்காடாகவும் 2049ஆம் ஆண்டில் 15 விழுக்காடாகவும் குறைக்க ஆயர் சிலாங்கூர் நிறுவனம் இலக்கு வகுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஆற்றோரம் இரசாயனப் பொருள் கண்டுபிடிப்பு- விசாரணையைத் தொடக்கியது சுற்றுச்சூழல் துறை




புத்ரா ஜெயா — காஜாங், ஜாலான் ரெக்கோவில் சுங்கை லங்காட் ஆற்றோரம் சட்டவிரோதமான முறையில் இரசாயனப் பொருள் வீசப்பட்டது தொடர்பில் சுற்றுச்சூழல் துறை விசாரணையை தொடக்கியுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் சிலாங்கூர் மாநில சுற்றுச்சூழல் துறை விசாணையை முடுக்கி விட்டுள்ளதாக சுற்றுச்சூழல் துறையின் தலைமை இயக்குநர் நோர்லின் ஜாபர் கூறினார். நேற்று மாலை அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 21 தோம்புகளில் இரசாயனக் கலவைகள் நிரப்பப்பட்டுள்ளது கண்டு பிடிக்கப்பட்டதாக அவர் சொன்னார். அந்த இரசாயனக் கலவை தரையில் கசிந்ததற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை என்று இன்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் அவர் தெரிவித்தார். அந்த இரசாயனப் பொருள்களால் பொதுமக்களுக்கு எந்த விளைவும் ஏற்படாமலிருப்பதை உறுதி செய்ய அப்பகுதி யாரும் நுழையாவண்ணம் மூடப்பட்டுள்ளதோடு அதன் மாதிரிகள் சோதனைக்காக இரசாயன இலாகாவுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று அவர் மேலும் கூறினார். இச்சம்பவத்திற்கு காரணமான தரப்பினரை சுற்றுச்சூழல் இலாகா தீவிரமாக தேடி வருவதாகவும் விரைவில் அவர்களை கைது செய்ய முடியும் எனத் தாங்கள் நம்புவதாகவும் அவர் சொன்னார்.

## எஸ்.ஓ.பி. விதிமீறல்- அபராதத் தொகையை அதிகரிப்பதில்

# எனக்கு உடன்பாடில்லை- அன்வார் கூறுகிறார்



ஷா ஆலம் — நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணைக்கான எஸ்.ஓ.பி விதிமுறைகளை மீறுவோருக்கு விதிக்கப்படும் அபராதத் தொகையை அதிகரிக்கும் பரிந்துரையில் தமக்கு உடன்பாடில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறுகிறார்.

அடித்தட்டு மக்களுக்கு பாதிப்பு ஏற்படாமலிருப்பதை உறுதி செய்யும் வகையில் அமலாக்க நடவடிக்கைகள் தெளிவானதாக இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

முகக்கவசம் அணியாதவர்கள் மீது அமலாக்கத் துறையினர் கடும் நடவடிக்கை எடுப்பதில் எந்த பிரச்னையும் இல்லை. எனினும், அபராதத் தொகையை உயர்த்தும் நடவடிக்கை பாகுபாடான சட்ட அமலாக்கத்திற்கு இட்டுச் செல்லக்கூடியதாக இருக்கக் கூடாது என்று அவர் வலியுறுத்தினார்.

அபராதத் தொகையை உயர்த்துவது இப்போதைக்கு முக்கியமல்ல. தெளிவான சட்ட அமலாக்கத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதுதான் இப்போதைய தேவை. எஸ்.ஓ.பி. விதிமுறையை மீறும் அமைச்சர் மீது நடவடிக்கை எடுக்காவிட்டால் பாகுபாடு காட்டப்படுவதாக மக்கள் புகார் கூறுவார்கள் என்றார் அவர்.

நாட்டில் கோவிட்-19 சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் எஸ்.ஓ.பி. விதிமுறைகளை மீறுவோருக்கு விதிக்கப்படும் அபராதத் தொகையை அதிகரிக்க வேண்டிய தருணம் வந்து விட்டதாக காவல் துறையினர் முன்னதாக கூறியிருந்தனர்.

இதனிடையே, கோவிட்- 19 நோய்த் தொற்று கண்டவர்களை காப்பாற்றுவதற்கு பாடுபட்டு வரும் முன் களப்பணியாளர்களுக்கு அலவன்ஸ் வழங்குவதை தாமதப்படுத்தும் செயலை ஒரு போதும் மன்னிக்க முடியாது என்றும் அன்வார் கூறினார்.

நாட்டில் நோய்த் தொற்று பிரச்னையை சமாளிப்பது தொடர்பில் அரசாங்கம் இதுவரை எந்தவொரு தெளிவான முடிவையும் எடுக்கவில்லை என்றும் கெஅடிலான் கட்சியின் தலைவருமான அவர் குற்றஞ்சாட்டினார்.

இவ்விவகாரத்தில் அரசாங்கத்திடம் தெளிவான நிலைப்பாடு இல்லாத காரணத்தால் பல்வேறு தரப்பினர் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது. நாம் அவர்களின் முயற்சியை சிறுமைப்படுத்தவில்லை. மாறாக தாமதமான முடிவுகள் நிலைமையை மோசமாக்கி விடும் என அஞ்சுகிறோம் என்றார் அவர்.

# நான்காயிரம் டாக்சி ஓட்டுநர்களுக்கு உணவுக் கூடைகள் விநியோகம்

ஷா ஆலம் – நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக வருமானம் இழந்த நான்காயிரத்திற்கும் மேற்பட்ட டாக்சி ஓட்டுநர்களுக்கு கித்தா சிலாங்கூர் உதவித் திட்டத்தின் கீழ் உணவுக் கூடைகள் வழங்கப்படும். கோவிட்-19 பெருந் தொற்று காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் மீது மாநில அரசாங்கம் பரிவு காட்டுவதை இந்நடவடிக்கை புலப்படுத்துவதாக அகில மலேசிய டாக்சி ஓட்டுநர் கூட்டமைப்பின் தலைவர் கமாருடின் முகமது ஹசான் கூறினார். சுற்றுலா துறையை பெரிதும் சார்ந்திருக்கும் தங்களின் தொழில் நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். கோவிட்-19 பெருந்தொற்று பரவல் காரணமாக வருமானம் பாதிக்கப்பட்ட சிலாங்கூர் மாநில மக்களுக்கு உதவும் வகையில் உணவுக் கூடை உதவித் திட்டத்தை அமல்படுத்த 13 லட்சம் வெள்ளி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கடந்த 20 ஆம் தேதி கூறியிருந்தார். இந்த நிதி பள்ளி பஸ் மற்றும் டாக்சி ஓட்டுநர்கள், மக்கள் குடியிருப்பு வீடுகளில் வசிப்போர், கே.இ.டி.பி. திடக்கழிவு நிர்வாக துறையில் பணிபுரிவோர் ஆகியோருக்கு பகிர்ந்தளிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

# நடமாட்டக் கட்டுப்பாட்டு விதிகளை மீறிய குற்றங்களுக்கு தண்டனை அதிகரிக்கப்பட வேண்டும்.




கோலாலம்பூர் : நடமாட்டக் கட்டுப்பாட்டு விதிகளை மீறிய குற்றங்களுக்காகத் தண்டம் செலுத்துபவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வாரமும் அதிகரித்து வருவதால், நடப்பிலுள்ள தண்டம் மற்றும் தண்டனைகளை மறு ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக மலேசியா போலீஸ் படை தலைவர் டான் ஸ்ரீ அப்துல் அமீட் படோர் கூறுகிறார். ஒவ்வொரு வாரமும் ஆயிரக்கணக்கான சம்மன்கள் பி.கே.பி எஸ்ஓபிக்கு கீழ்ப்படியாத மற்றும் மீறிய நபர்களுக்கு வழங்கப்படுகின்றன. அவற்றில் பெரும்பாலானவை சிறை தண்டனை இல்லை. அவரைப் பொறுத்தவரை, சிலர் நல்ல காரணமின்றி மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களை கடந்து பயணம் செய்வதன் மூலம் நோய்த் தொற்று அதிகரிக்கிறது, இதனால் நிலைமை மோசமடைகிறது. நடமாட்டக் கட்டுப்பாட்டு விதிகளை மீறுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவது, அவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனையின் தாக்கம் வலுவாக இல்லை என்று பொருள் படுகிறது.

இப்பொழுது விதிக்கப்படும் தண்டம் வெள்ளி 1000 சிறியதாகக் கருதப் பட்டால், அதன் தொகையை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் வழங்கப் படுவதற்கான காலம் கனிந்துள்ளதாகப் பெர்னாமாவை இன்று தொடர்பு கொண்டபோது அவர் கூறினார்.

ஒரு எச்சரிக்கையுடன் விடுவிக்க இடம் கொடுக்காமல் விதி முறைகளுக்கு கீழ்ப் படியாதவர்களுக்குச் சம்மன் அனுப்புமாறு தனது படை உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பி.கே.பி செயல்படுத்தப் பட்டபோது கடமைகளில் இருந்த மொத்தம் 474 பி.டி.ஆர்.எம் பணியாளர்கள் கோவிட்-19 நோய்த்தொற்றுக்கு இலக்காகிச் சிகிச்சைக்குச் சென்றுள்ள வேளையில் மேலும் 1,628 பேர் தனிமைப் படுத்தப்பட்டனர் என்கிறார் போலீஸ் படைத்தலைவர் அப்துல் ஹமீத்.

“நோய்த் தொற்றுக்கு எதிராகச் செயல்பட வேண்டிய முன்னணி பாதுகாப்பு ஊழியர்களுக்கு, மருத்துவமனையில் மற்றொரு முன்னணி குழு சிகிச்சை அளிக்க வேண்டியிருந்தது மிகவும் வருத்தமாக உள்ளது,” என்று அவர் கூறினார்.

நாட்டில் கோவிட் -19 இன் பரவல் தற்போது வேகம் எடுத்துள்ளதை அதிகரிப்பு காட்டுகிறது. வெள்ளிக்கிழமை மொத்தம் 5,725 நோய்த்தொற்றுகள் பதிவாகியிருந்த நிலையில், சனிக்கிழமை அது 5,728 ஆக பதிவாகியுள்ளன. புதிய தினசரி நோய்த்தொற்றுகளின் எண்ணிக்கை 6,000 யை நெருங்குகிறது.



# கோவிட்-19 பரிசோதனை கருவிக்கு விலை வரம்பை நிர்ணயிப்பீர்

ஷா ஆலம்– அவசர கால அமலாக்கத்திற்கேற்ப கோவிட்-19 பரிசோதனை கருவிகளுக்கு விலை வரம்பு நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி வலியுறுத்தியுள்ளார். பொது மக்களும் அந்த பரிசோதனை கருவியை வாங்குவதற்கு ஏதுவாக அரசாங்கம் நடப்பில் உள்ள அவசர கால சட்டத்தை பயன்படுத்தி அந்த சாதனத்திற்கு உச்ச வரம்பு விலையை நிர்ணயம் செய்யலாம் என்று அவர் சொன்னார். இந்த பரிந்துரையை தாம் தேசிய பாதுகாப்பு மன்றத்திடம் முன் வைத்துள்ளதோடு இந்த உபகரணம் வாங்குவதற்கு உதவித் தொகை வழங்கும் சாத்தியத்தையும் எடுத்துரைத்துள்ளதாக அவர் கூறினார். நேற்று இரவு முகநூல் வழி நடைபெற்ற கோவிட்-19 தடுப்பு நடவடிக்கைகள் குறித்த நேரடி விவாத நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். எதிர் கட்சித் தலைவர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம், பினாங்கு முதலமைச்சர் சௌ கோன் இயோ, நெகிரி செம்பிலான் மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஹருண் ஆகியோரும் இந்த விவாதத்தில் பங்கு கொண்டனர். தற்போது தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளில் ஒரு பகுதியினரை தனியார் மருத்துவமனைகள் ஏற்றுக் கொள்வதற்கு ஏதுவாக அத்தரப்பினருடன் அரசாங்கம் ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அமிருடின் பரிந்துரைத்தார்.

# கோவிட்-19 ஆய்வக பரிசோதனைக்காக 115 தொண்டூழியர்களுக்கு தடுப்பூசி

மெர்சிங் – கோவிட்-19 மூன்றாம் கட்ட ஆய்வக பரிசோதனைக்காக 115 தொண்டூழியர்கள் தடுப்பூசியைப் பெற்றனர். இதுவரை ஐந்து மாநிலங்களில் உள்ள ஒன்பது மருத்துவமனைகளில் இந்த தடுப்பூசி திட்டம் மேற்கொள்ளப்பட்டதாக சுகாதார அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் ஆடாம் பாபா கூறினார். இந்த தடுப்பூசித் திட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் தகுதிகளை கொண்டிருக்கும் 18 வயதுக்கும் மேற்பட்ட சுமார் மூவாயிரம் தன்னார்வலர்களில் முதல் கட்டமாக இந்த 115 பேருக்கு இந்த தடுப்பூசி செலுத்தப்பட்டதாக அவர் சொன்னார். இந்த ஆய்வ பரிசோதனைக்கான மையங்களாக அம்பாங் மருத்துவமனை, சுங்கை பூலோ மருத்துவமனை, கெடா, சுல்தான் அப்துல் ஹலிம் மருத்துவமனை, பினாங்கு மருத்துவமனை, பேராக், ராஜா பெர்மைசூரி பைனுன் மருத்துவமனை, தைப்பிங் மருத்துவமனை மற்றும் சரவா பொது மருத்துவமனை ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். மூன்று தினங்களுக்கு முன்னர் தொடங்கப்பட்ட இந்த ஆய்வக பரிசோதனைத் திட்டம் அடுத்த 13 மாதங்களுக்கு மேற்கொள்ளப்படும். அந்த தடுப்பூசியின் ஆக்கத்தன்மை, ஆற்றல் மற்றும் பாதுகாப்பு குறித்து தொடர்ந்து கண்காணிக்கப்படும். எஞ்சியிருக்கும் தொண்டூழியர்கள் அடுத்த நான்கு வாரங்களில் தடுப்பூசியைப் பெறுவர் என்றார் அவர். மலேசியாவுக்கும் சீனாவுக்குமிடையிலான இந்த மூன்றாம் கட்ட ஆய்வக பரிசோதனை சீனாவின் உயிரியல் மருத்துவ, அறிவியல் மருத்துவ கழகத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுகிறது.

# யுனிசெல் இணைய வழி கல்வித் திட்டத்தில்
# 10,000 மாணவர்கள் பங்கேற்பு




ஷா ஆலம் : யுனிசெல் எனப்படும் சிலாங்கூர் பல்கலைக்கழகத்தினால் கடந்த ஜனவரி மாதம் அறிமுகப்படுத்தப்பட்ட இயங்கலை பள்ளித் திட்டத்தில் நாடு முழுவதும் உள்ள சுமார் பத்தாயிரம் மாணவர்கள் பங்கேற்றுள்ளனர். 2020ஆம் ஆண்டிற்கான எஸ்.பி.எம். மற்றும் எஸ்.டி.பி.எம் தேர்வுகளை எழுதும் மாணவர்களை இலக்காக கொண்டு இந்த இணைய வழி கல்வித் திட்டம் மேற்கொள்ளப்படுவதாக அப்பல்கலைக்கழகத்தின் மாணவர் மேம்பாடு மற்றும் சமூக ஒருங்கமைப்புத் துறைத் தலைவர் அமிடி அப்துல் மானான் கூறினார். அவ்விரு தேர்வுகளை எழுதும் மாணவர்களைத் தயார் படுத்தும் விதமாக வகுப்புகளும் பயிற்சிப் பட்டறைகளும் இத்திட்டத்தின் வழங்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார். அதோடு மட்டுமின்றி கேள்விகளுக்கு பதிலளிக்கும் வழிமுறைகள் குறித்து விளக்கப்படுவதோடு குறிப்பிட்ட பாடங்களுக்கு சிறப்பு வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்தில் இளம் தலைமுறையினரின் மேம்பாட்டிற்கு முக்கியமான ஆற்றல், தனிமனிதப் பண்பு மற்றும் கல்வி ஆகிய மூன்று அம்சங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது என்றார் அவர். இந்த கல்வித் திட்டத்தில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள் uvs.unisel.edu.my என்ற அகப்பக்கம் வாயிலாக பதிவு செய்யலாம் என்று அவர் ஆலோசனை கூறினார்.

# ஊராட்சி மன்றங்களின் விதிமுறைகளுக்கேற்ப
# இரவுச் சந்தைகள் செயல்படும்



ஷா ஆலம் – ஊராட்சி மன்றங்கள் நிர்ணயித்துள்ள விதிமுறைகளுக்கேற்ப சிலாங்கூர் மாநிலத்தில் இரவுச் சந்தைகள் (பாசார் மாலாம்) செயல்படும் என்று ஊராட்சி மன்றங்களுக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹான் கூறினார். மாநிலத்தில் காலைச் சந்தைகளை திறக்கும் விவகாரத்தில் நடப்புச் சூழலுக்கேற்ப ஊராட்சி மன்றங்கள் முடிவெடுத்த அதே அணுகுமுறை இரவுச் சந்தை விஷயத்திலும் கடைபிடிக்கப்படும் என்று அவர் சொன்னார். சந்தைகளை நிர்வகிக்கும் மற்றும் கண்காணிக்கும் வழிமுறைகள் அந்தந்த ஊராட்சி மன்றங்களின் வசதிக்கேற்ப மாறுபடுவதாகவும் அவர் குறிப்பிட்டார். வணிகர்களும் சந்தைக்கு வரும் வாடிக்கையாளர்களும் சீரான செயலாக்க நடைமுறையை எப்போதும் கடைபிடிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காலத்தில் இரவுச் சந்தைகள் மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை செயல்பட அரசாங்கம் அனுமதி வழங்கியது.

# வேலை தேடுவோருக்கு உதவ புதிய அகப்பக்கம்
# சிலாங்கூர் அரசு தொடக்கியது

ஷா ஆலம் – வேலையில்லாப் பிரச்னைக்கு குறுகியகால மற்றும் நீண்டகால அடிப்படையில் தீர்வு காண்பதற்கு ஏதுவாக www.selangorkerjaya.com.my எனும் அகப்பக்கத்தை சிலாங்கூர் மாநில அரசு தொடக்கியுள்ளது. வேலை தேடும் தரப்பினர் மற்றும் காலியாக உள்ள வேலைகளை நிரப்ப ஆட்களைத் தேடும் முதலாளிகள் குறித்த பல்வேறு தகவல்களை இந்த அகப்பக்கம் கொண்டிருக்கும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். இது தவிர்த்து இந்த அகப்பக்கம் சமூக ஊடகங்களான முக நூல் இன்ஸ்டாகிராம், லிங்கெடின், டிவிட்டர், வாட்ஆப் புலனம் ஆகியவற்றின் வாயிலாக வேலை வாய்ப்பு குறித்து பொதுமக்களுடன் நேரடி உரையாடல்களையும் நடத்தும் என்று அவர் சொன்னார். இந்த சேவை முற்றிலும் இலவசமானது என்பதோடு இதற்கான முழு செலவையும் மாநில அரசு ஏற்றுக் கொள்ளும் என்று அவர் தெரிவித்தார். மாநிலத்தில் வேலை வாய்ப்புக்களைத் தேடித் தரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாநில அரசு 5 கோடியே 80 லட்சம் வெள்ளியைத் ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இளையோர் குறிப்பாக பட்டதாரிகள் இந்த வாய்ப்பினை முறையாக பயன்படுத்தி வேலைகளைத் பெறுவேதோடு மாநிலத்தின் பொருளாதாரத்திற்கு உத்வேகம் அளிக்கும் முயற்சிகளுக்கும் உதவ வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

# மடிக்கணினி விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன
## புக்கிட் மெலாவத்தி சட்டமன்ற உறுப்பினர்



ஷா ஆலம் – வீட்டிலிருந்து கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக மடிக்கணினிகளைப் பெற வசதி குறைந்த மாணவர்கள் செய்த விண்ணப்பங்களை புக்கிட் மெலாவத்தி சட்டமன்ற தொகுதி பரிசீலனை செய்து வருகிறது. ஆரம்ப, இடைநிலை பள்ளிகள் மற்றும் உயர்கல்விக் கூடங்களைச் சேர்ந்த 20 மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இதுவரை பெறப்பட்டுள்ளதாக சட்டமன்ற உறுப்பினர் ஜுவாய்ரியா ஜுல்கிப்ளி கூறினார். உண்மையில் உதவி தேவைப்படும் வசதி குறைந்த பி40 தரப்பினருக்கு அவர்களின் தகுதி தொடர்பான ஆய்வின் அடிப்படையில் மடிக்கணினிகளை வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறோம் என்றார் அவர். இந்த மடிக்கணினிகளை வழங்குவதன் மூலம் சம்பந்தபட்ட மாணவர்களின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் சீராக நடைபெறுவதற்குரிய வாய்ப்பு ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார். கணினி போன்ற மின்னியல் உபகரணங்கள் இல்லாமை வீட்டிலிருந்து கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கிராமப் புற மாணவர்களுக்கு பெரும் சிரமத்தை உண்டாக்குகிறது என்று அவர் மேலும் சொன்னார். தகவல் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி வீட்டிலிருந்து கல்வி கற்பதை புதிய இயல்பு கட்டாயப்படுத்துகிறது. இந்த புதிய இயல்புக்கு தங்களை தயார் படுத்திக் கொள்ளவதில் கிராமப்புற மாணவர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர் என்றார் அவர்.

# கித்தா சிலாங்கூ

#SELANGORGEMPURCOVID19

## மொத்தம் வெ.73.877 மில்லி

### மக்கள் நட்புறவுத் திட்டத்திற்கு சிறப்பு ஒதுக்கீடு

- சட்டமன்றத் தொகுதிகளுக்கான சிறப்பு ஒதுக்கீடு **வெ.5.6 மில்லியன்**
- நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான சிறப்பு ஒதுக்கீடு **வெ.1.1 மில்லியன்**
  - அடிப்படை பொருள் விநியோகத்தை சம்பந்தப்படுத்திய பரிவுமிக்க மக்கள் திட்டம்/ நடவடிக்கை தொடரப்படும்

### முன்களப் பணியாளர்களுக்கு உணவு உதவித் திட்டம்

MBI

**வெ.3 மில்லியன்**

- மதிய மற்றும் இரவு உணவு விநியோகம்
- மருத்துவமனை பணியாளர்கள், காவல் துறை மற்றும் இராணுவ வீரர்களுக்கு வழங்கப்படும்

### குறைந்த நோய்த் தாக்கம் நோயாளிகளுக்கு போக்கு

இலவச **ஸ்மார்ட் சில**

- செர்டாங், மேப்ஸ் மையத்தில் உ தனிமைப்படுத்துதல் மற்றும் சிகி ஏற்றிச் செல்வது

### மக்கள் குடியிருப்புத் திட்ட வீடுகள் (பி.பி.ஆர்.) மற்றும் கவுன்சில் வீடுகளுக்கான வாடகை மற்றும் மாதத் தவணை கட்டணம் ஒத்தி வைப்பு

**வெ.1.7 மில்லியன்**

- ஜனவரி மாதத்திற்கு வாடகை விலக்களிப்பு மற்றும் பிப்ரவரி மற்றும் மார்ச் ஆகிய இரு மாதங்களுக்கு வாடகை ஒத்தி வைப்பு
- **2,361** பி.பி.ஆர். வீட்டு வாடகை குடியிருப்பாளர்கள் பயன்பெறுவர்

### விவேக வாடகைத் திட்டம்

SMART SEWA

**வெ.1 மில்லியன்**

- 2021ஆம் ஆண்டு ஜனவரி முதல் மார்ச் வரை மூன்று மாதங்களுக்கு வாடகையை ஒத்தி வைப்பது
- 450 வீடுகளில் வாடகைக்கு குடியிருப்போர் பயன்பெறுவர்

### யாயாசான் சிலாங்கூர் கல்

762 பேரின் கல்விக் க

நிதிச் செ

**வெ.7.177**

### உணவுக் கூடை விநியோகம்

**வெ.1.3 மில்லியன்**

அன்றாடத் தேவைக்கான பொருள்களை. டாக்சி ஓட்டுநர்கள், பள்ளி பஸ் ஓட்டுநர்கள், கும்புலான் டாருள் ஏசான வேஸ்ட் மேனேஜமெண்ட் திடக் கழிவு லோரி ஓட்டுநர்கள் மற்றும் பூர்வக்குடி மக்களுக்கு வழங்குவது

### விவசாயத் துறை சார்ந்தவர்களுக்கு உதவி

**வெ.2 மில்லியன்**

மீனவர்கள்
ஒருவருக்கு வெ.300 மதிப்புள்ள பெட்ரோல் பற்றுச் சீட்டு கால் நடை தீவனம் மற்றும் விவசாய பொருள் விநியோகம்

கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டவர்கள்
கால் நடை தீவனம் மற்றும் விவசாய பொருள் விநியோகம்

விவசாயிகள்
உணவுக் கூடைகள் மற்றும் உணவுப் பொருள் விநியோகம்

10160 விவாசாயிகள் பயனடைந்தனர்

### இலக்கு நிர்ணயிக்கப்பட்ட

**வெ.6 மி**

**இலவச நோய்க் கண்**

- சிலாங்கூரில் உள்ள 50,000 பே
  - கீழ்க்கண்டவர்களை இத்திட்டம் இலக்
    நோய்த் தாக்கம் அதிகம் உள்ள முதியே
    மையங்களில் உள்ளோர் மற்றும் டயாலி
- **பி40 பிரிவினர் மற்றும்**
- **சிலாங்கூர் மாநில உயர்கல்வி**

### வீட்டு கண்காணிப்பு உபகரணம் செலங்கா

SELGATE CORPORATION

**மாநில அரசு மற்றும் செல்கேட் உடனான ஒத்துழைப்பைத் தொடர்வது**

- சுய பாதுகாப்பு உபகரணத்தின் பயன்பாடு குறித்து பயிற்றுவிக்க சிறப்பு ஹோட்லைன் சேவை மற்றும் 24 மணி நேர அழைப்பு மையம்

### முன்களப் பணியாளர்களின் பிள்ளைகள் பராமரிப்புத் திட்டம்

முன்களப் பணியாளர்களின் பிள்ளைகள் பராமரிப்புத் திட்டம் **வெ.1 மில்லியன்**

- முன்களப் பணியாளர்களின் பிள்ளைகளைப் பராமரிப்பதற்காக பொது மருத்துவமனைகள் மற்றும் தற்காலிக மையங்களில் மழலையர் பள்ளி மற்றும் சிறார் பராமரிப்பு மையங்களை தற்காலிகமாக அமைப்பது
- ஜனவரி 25ஆம் தேதி தொடங்கி 2 மாதங்களுக்கு இலவசமாக நடத்தப்படும்
- இத்திட்டத்தின் வழி 400 குடும்பங்கள் பயன்பெறும்

### சிலாங்கூர் மக்கள் டியூஷ (பி.டி.ஆர்.எஸ்.)

- சிலாங்கூர் அரசு, சிலாங்கூர் மாநில பொது நூலக கழகம் ம திட்டம்
  - ஜனவரி 19ஆம் தேதி வரை 3,755 பேர்
- எஸ்.பி.எம். மாணவர்கள் மலா கணிதப் பாட விரைவு மீள்பா
- எஸ்.டி.பி.எம். மாணவர்களுக் முயேட் பயிற்சி திட்டம்

# ...ர் உதவித்திட்டம்

## ...மில்லியன்

amirudinbinshari · amirudin_shari · AmirudinShari · Amirudin Shari

www.amirudinshari.com

### ...உள்ள கோவிட்-19 ...வரத்து சேவை

...ாங்கூர் பஸ் சேவை

...உள்ள கோவிட்-19
...கிச்சை மையத்திற்கு நோயாளிகளை

### ...விக் கடன் ரத்து

...டனை ரத்து செய்வது

...லவினம்
...மில்லியன்

### ...பரிசோதனை

...ில்லியன்
...டறியும் பரிசோதனை
...பர் பயன் பெறுவர்
...காக கொண்டுள்ளது
...ார் குறிப்பாக, மூத்த குடிமக்கள் பராமரிப்பு
...சிஸ் சிகிச்சை பெறுவோர்

...க்கூட மாணவர்கள்

### ...ன் மைய அகப்பக்கம்

...கல்வி இலாகா, சிலாங்கூர்
...ற்றும் எம்.பி.ஐ. கூட்டுத்

...பதிவு செய்துள்ளனர்
...ாய், ஆங்கிலம், வரலாறு மற்றும்
...ர்வைத் திட்டம்
...கு பொதுக் கல்வி மற்றும்

## சிலாங்கூர் மாநில 2021 பட்ஜெட் விரைவுத் திட்டங்கள்

### இலக்கவியல் திட்டம்

- சிலாங்கூர் இ-கிச்சன்
  - ஹிஜ்ரா சிலாங்கூர் வழி அமலாக்கம்
  - வெ.3 மில்லியன் ஒதுக்கீடு
  - நடைமுறை வர்த்தக தளத்திலிருந்து மின்னியல் வர்த்தக தளத்திற்கு மாறுவதில் உண்டாகும் செலவை ஈடுகட்ட ஹிஜ்ரா கடனுதவி

### இலக்கவியல் திட்டம்

- சில்லறை மற்றும் குறு வியாபாரிகளுக்கான மின்னியல் விநியோகத் திட்டம்
- ஹிஜ்ரா சிலாங்கூர் ஏற்பாட்டில் அமலாக்கம்
- வெ.5 மில்லியன் ஒதுக்கீடு
- இலக்கவியல் தளத்தின் வாயிலாக குறைவான விலையில் எளிதாகவும் விரைவாகவும் நேரடி பொருள் விநியோகம்
- இலக்கவியல் மய வருவாய் திட்டத்தின் வாயிலாக விநியோக மற்றும் நடவடிக்கை செலவினங்களை ஈடுகட்டுதல்
- இத்திட்டத்தின் வழி 1,000 சிறு மற்றும் குறு தொழில்முனைவோர் பயன்பெறுவர்

### சிலாங்கூர் இலக்கவியல் பங்காளித் திட்டம்

வெ.3 மில்லியன்

RAKAN DIGITAL

- வணிகர்கள், மூத்த குடிமக்கள், உயர்கல்விக்கூட மாணவர்கள் மத்தியில் இலக்கவியல் பயன்பாட்டை அதிகரிப்பதற்கு பயிற்சி வழங்குதல்
- இத்திட்டத்திற்கு சிலாங்கூரில் 1,000 பேர் பயன் பெற இலக்கு

### சிலாங்கூர் ஃபிரிலான்ஸ்

வெ.10 மில்லியன்

- பகுதி நேரத் தொழிலாளர்கள் வாயிலாக இத்திட்டம் அமலாக்கம். தற்காலிக வர்த்தகம் மூலம் சிலாங்கூர் மக்கள் கூடுதல் வருமானமும் வேலை வாய்ப்பும் பெறுவதற்குரிய சூழலை உருவாக்குதல்
- இந்த தற்காலிக வேலை வாய்ப்பு உருவாக்கத்தின் வழி 1,000க்கும் மேற்பட்டோர் பயன்பெறுவர்

### டாருள் ஏசான் வர்த்தக திட்டம் (நாடி)

தொடக்க ஒதுக்கீடு
வெ.10 மில்லியன்

- மகளிர் தொழில்முனைவோருக்கான சிறப்புத் திட்டம்
- ஊராட்சி மன்றங்களிடமிருந்து தற்காலிக லைசென்ஸ் பெற்று வர்த்தகத்தை தொடர வாய்ப்பு
- ஆயிரம் வெள்ளி முதல் மூவாயிரம் வெள்ளி வரை கடன் பெறுவதற்கான கூடுதல் அனுகூலம்
- வர்த்தக இடம் மற்றும் எஸ்.எஸ்.எம். லைசென்ஸ் இன்றி விண்ணப்பம் செய்ய வாய்ப்பு

### ஸ்மார்ட் சிலாங்கூர் சி51 நடவடிக்கை அறை

வெ.6 மில்லியன்

- சிலாங்கூரில் கோவிட்-19 சம்பவங்கள் தொடர்பான மையக் கண்காணிப்பை ஏக காலத்தில் கூட்டரசு அரசாங்க நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்வது மற்றும் கூட்டு கட்டுப்பாட்டு மேலாண்மைக்கு ஒத்துழைப்பு நல்குவது
- தேவைப்படும் தரவுகளை உடனடியாக வழங்கக்கூடிய இணைய ஒருங்கமைப்பு, விவேக தரவு தளம் மற்றும் மைய தொடர்பு வசதிகளை கொண்டிருப்பது

### வெள்ள நிவாரண கித்தா சிலாங்கூர் திட்டம்

வெள்ள உதவி நிதி
வெ.2 மில்லியன்

- வெ.1 மில்லியன் (பகாங் மாநிலம்)
- வெ.5 லட்சம் (திரங்கானு மாநிலம்)
- வெ.5 லட்சம் (கிளந்தான் மாநிலம்)

### கோவிட்-19 நோய்த் தொற்றை கையாள உதவித் நிதித் திட்டம்

மீண்டும் அமலாக்கம்

- 2020 வரையிலான வசூல் வெ.9.3 மில்லியன்
- கோவிட்-19 பெருந்தொற்றைக் கையாளும் முன்களப் பணியாளர்கள் மற்றும் மருத்துவத் துறை சார்ந்தவர்களின் தேவைக்கு பயன்படுத்தப்படும்
- மந்திரி புசார் தனது ஒரு மாத சம்பளத்தை வழங்கி இந்த நிதித் திட்டத்தை தொடக்கி வைத்தார்.



# உணவு உற்பத்தி துறைக்கு உத்வேகம் அளிக்க வெ. 15 லட்சம் ஒதுக்கீடு

ஷா ஆலம் – கோவிட்–19 நோய்த் தொற்று காரணமாக பாதிக்கப்பட்ட உணவு உற்பத்தி துறைக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் சிலாங்கூர் மாநில அரசு 15 லட்சம் வெள்ளியை ஒதுக்கியுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் மீனவர்களுக்கு பெட்ரோலுக்கான பற்றுச் சீட்டுகளும் விவசாயிகளுக்கு வேளாண் பொருள்களும் கால்நடை வளர்ப்போருக்கு தீவணங்களும் விரைவில் வழங்கப்படும் என்று விவசாயத் துறைக்கான ஆட்சிக் குழு உறுப்பினர் இஞ்சினியர் இஷாம் ஹஷிம் கூறினார்.

இத்தகைய திட்டங்களின் வாயிலாக விவசாயத் துறை சார்ந்தவர்களின் சுமையை குறைக்க முடியும் என்பதோடு அவர்கள் தொடர்ந்து தாங்கள் சார்ந்த துறைகளில் ஈடுபட்டு உற்பத்தியையும் வருமானத்தையும் பெருக்க முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு மாநில அரசு நேரடியாகவும் விரிவான அளவிலும் உதவிகளை வழங்கும் என்று அவர் மேலும் சொன்னார்.

மீனவர்கள், விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் உள்ளிட்ட விவசாயத் துறையில்

உள்ளவர்களுக்கு உதவும் நோக்கில் 20 லட்சம் வெள்ளியை சிலாங்கூர் அரசு ஒதுக்கீடு செய்துள்ளதாக மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கடந்த 20 ஆம் தேதி கூறியிருந்தார்.

# சிலாங்கூர் கெர்ஜாயா விவேக சுயவிபர முறை வேலைக்கான தேர்வு பணியை எளிதாக்க உதவும்



ஷா ஆலம் – சிலாங்கூர் கெர்ஜாயா விவேக சுயவிபர முறையின் வாயிலாக விண்ணப்பதாரரின் தகுதிக் குறிப்புக்கும் காலியாக உள்ள வேலைக்கும் உள்ள பொருத்தத்தை உறுதி செய்ய முடியும். முதலாளியின் எதிர்பார்ப்புக்கேற்ப விண்ணப்பதாரரின் தகுதிகள் இருக்கிறதா என்பதை உறுதி செய்ய இந்த விவேக சுயவிபர முறை உதவும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். இது தவிர்த்து வேலை தேடுவோரின் ஆற்றலைப் பெருக்குவதற்கு ஏதுவாக அவர்களின் திறனை வளர்ப்பதற்குரிய பயிற்சிகளும் வழங்கப்படும் என்றும் அவர் சொன்னார். இதன் வாயிலாக ஊழியர்கள் திறன்பெற்றவர்களாகவும் தொடர்ந்து ஒரே இடத்தில் நிலைத்து வேலை செய்யக்கூடியவர்களாகவும் விளங்குவதை உறுதி செய்ய முடியும் என்று அவர் குறிப்பிட்டார். வேலை தேடுவோர் எனும் அகப்பக்கம் வாயிலாக விரைந்து விண்ணப்பம் செய்யும்படி அவர் கேட்டுக் கொண்டார். சிலாங்கூர் மந்திரி புசார் கழகத்தின் திட்டங்களில் ஒன்றாக சிலாங்கூர் கெர்ஜாயா விளங்குகிறது. இது வேலை வாய்ப்பைத் தேடித் தரும் மற்ற தளங்களைக் காட்டிலும் தனித்துவமான அம்சங்களைக் கொண்டுள்ளது.

# வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு வெ. 20 லட்சம் உதிவி நிதி- சிலாங்கூர் அரசு உதவி

ஷா ஆலம் – வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட மூன்று கிழக்கு கரை மாநிலங்களுக்கு கித்தா சிலாங்கூர் உதவித் திட்டத்தின் கீழ் 20 லட்சம் வெள்ளி நிவாரண நிதியாக வழங்க சிலாங்கூர் அரசு அறிவித்துள்ளது.

பகாங் மாநிலத்திற்கு பத்து லட்சம் வெள்ளியும் திரங்கானு மற்றும் கிளந்தான் ஆகிய மாநிலங்களுக்கு தலா ஐந்து லட்சம் வெள்ளியும் வழங்கப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறியிருந்தார்.

கடுமையான வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகாங், கிளந்தான் மற்றும் திரங்கானு மாநிலங்களைச் சேர்ந்த மக்களின் சிரமத்தில் தாங்களும் பங்கு கொள்வதோடு அவர்கள் மீது அனுதாபமும் கொள்வதாக அவர் சொன்னார்.

கடந்த மாதம் தொடக்கத்தில் இம்மாநிலங்களில் ஏற்பட்ட கடும் வெள்ளத்தால் பல்லாயிரக்கணக்கானோர் தங்கள் வசிப்பிடங்களையும் உடைமைகளையும் இழந்தனர். 24 மணி நேரம் நீடித்த அடைமழை காரணமாக ஆறுகள் நிரம்பி குடியிருப்புப் பகுதிகளை நீர் சூழ்ந்தது.

அந்த மூன்று மாநிலங்கள் தவிர்த்து, பேரா, சிலாங்கூர் மற்றும் ஜோகூரின் பல பகுதிகளிலும் வெள்ளம் ஏற்பட்டு பொதுமக்கள் தற்காலிக நிவாரண மையங்களில் அடைக்கலம் நாடும் நிலை ஏற்பட்டதை மக்கள் அறிவர்.

# சிலாங்கூரில் 50 இந்திய கிராமத் தலைவர்கள் நியமனம்



கோலாலம்பூர் – 2021–2022ஆம் ஆண்டுக்கான இந்திய கிராமத்து தலைவர் பதவிக்கு முதல் கட்டமாக 50 பேரை சிலாங்கூர் மாநில அரசாங்கம் நியமித்திருக்கிறது.

நியமிக்கப்பட்ட கிராமத் தலைவர்கள் சிறந்த சேவைகளை வழங்க வேண்டும் என்று சிலாங்கூர் மாநில ஆட்சி குழு உறுப்பினர் வீ. கணபதிராவ் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் இந்திய கிராமத் தலைவர்கள் இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்வதற்காகவும் சமுதாய பிரச்சனைகளுக்கு எளிதில் தீர்வுக் காணுவதற்கும் அவர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக கணபதிராவ் தெரிவித்தார்.

மாநில அரசாங்கத்தின் செயல்திட்டங்கள் மற்றும் மக்களுக்கு தேவையான உதவிகளை, மாநில ஆட்சி குழு உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நில அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகத்தினருடன் இணைந்து கால சூழ்நிலைக்கு ஏற்ப அவர்கள் செயல்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஆலய நிலப்பிரச்னைகள், தமிழ்ப்பள்ளிகள் சார்ந்த திட்டங்கள் உள்ளிட்ட இந்திய சமூதாயம் தொடர்பான தகவல்களை இந்திய கிராமத் தலைவர்கள் தங்களிடம் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம், என்றார் அவர். சிலாங்கூரில் தற்போது நியமிக்கப்பட்டிருக்கும் இந்திய கிராமத் தலைவர்களின் செயல்பாடு, சமுதாயத்திற்கு சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இன்னும் நியமிக்கப்படாத, இந்திய கிராமத் தலைவர்கள் இரண்டாம் கட்ட நியமனத்தில் இடம்பெறுவர்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

# சிலாங்கூரின் பொருளாதார வளர்ச்சிக்கு வான் போக்குவரத்துத் துறை உதவும்



ஷா ஆலம் – சிலாங்கூர் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளிப்பதில் வான் போக்குவரத்து துறை சிறந்த முதலீடாக விளங்குவதாக முதலீட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ தெங் சாங் கிம் கூறினார்.

விமானம் சார்ந்த துறையை மேம்படுத்துவதில் சிலாங்கூர் கூடுதல் அனுகூலங்களைக் கொண்டுள்ளதாக அவர் சொன்னார்.

நமது மாநிலத்தில் இரு பெரிய விமான நிலையங்கள் உள்ளன. சிப்பாங்கிலுள்ள கோலாலம்பூர் அனைத்துலக விமான நிலையம் மற்றும் சுபாங், சுல்தான் அப்துல் அஜிஸ் விமான நிலையம் ஆகியவையே அவையாகும் என்றார் அவர்.

விமானங்களை பழுதுபார்ப்பது, பராமரிப்பது போன்ற பணிகளை மேற்கொள்ளும் வசதிகளைக் கொண்ட வான் போக்குவரத்து மையத்தை அமைப்பதன் மூலம் அனைத்து நாடுகளுக்கும் சேவையை வழங்குவதற்குரிய வாய்ப்பு ஏற்படும் என்றும் அவர் சொன்னார்.

ஆசியாவின் பொருளாதார வளர்ச்சி காரணமாக தனியார் விமானங்களின் பயன்பாடு அதிகரிக்கும் என ஆய்வுகள் கூறுகின்றன. நம்மிடையே விமான நிலையு வசதியும் திறன் பெற்ற மனித வளமும் இருக்கும் பட்சத்தில் இத்துறையை மேலும் விரிவுபடுத்த முடியும் எனவும் அவர் நம்பிக்கைத் தெரிவித்தார்.

இதனிடையே, 2021ஆம் ஆண்டிற்கான வான் போக்குவரத்து கண்காட்சியை வரும் ஏப்ரல் மாதம் நடத்துவது தொடர்பில் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று டத்தோ தெங் கூறினார்.

கோவிட்-19 பெருந்தொற்று தொடர்பான நிலவரங்களை கவனத்தில் கொள்ள விரும்புகிறோம். நோய்த் தொற்று நீடித்தால் அந்த கண்காட்சி ஆறு மாதங்களுக்கு ஒத்தி வைக்கப்படும். இக்கண்காட்சி நடைபெறும் பட்சத்தில் தென்கிழக்காசிய அளவிலும் மலேசிய அளவிலும் இத்தகைய கண்காட்சியை ஏற்று நடத்தும் முதல் மாநிலமாக சிலாங்கூர் திகழும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கோத்தா அங்கிரிக் தொகுதி ஏற்பாட்டில் வசதி குறைந்த மாணவர்களுக்கு 'டேப்லெட்' விநியோகம்




ஷா ஆலம் – கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக கோத்தா அங்கிரிக் சட்டமன்றம் தொகுதியைச் சேர்ந்த 30 ஏழை மாணவர்களுக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டேப்லெட் எனப்படும் வரைப்பட்டிகையை வழங்கினார்.

மக்கள் நட்புறவுத் திட்டத்தின் கீழ் இந்த டேப்லெட் உபகரணங்களை வழங்குவதற்கு இருபதாயிரம் வெள்ளி செலவிடப்பட்டதாக சட்டமன்ற உறுப்பினர் நஜ்வான் ஹலிமி கூறினார்.

தகுதியுள்ள மாணவர்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவதை உறுதி செய்வதற்காக பள்ளிகளின் ஒத்துழைப்புடன் அந்த உபகரணங்கள் விநியோகம் செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். தங்கள் பிள்ளைகளுக்கு மடிக் கணினி அல்லது டேப்லெட் சாதனம் வாங்க இயலாத நிலையில் உள்ளது தொடர்பில் பல பெற்றோர்களிடமிருந்து தாம் புகார்களைப் பெற்றேன். இதன அடிப்படையில் இந்த உதவித் திட்டத்தை அமல்படுத்த நடவடிக்கை மேற்கொண்டேன் அவர் சொன்னார். இதுவரை மூன்று மாணவர்கள் இந்த உபகரணத்தைப் பெற்றுள்ள வேளையில் எஞ்சியவை கட்டங் கட்டமாக மாணவர்களுக்கு வழங்கப்படும் என்றார் அவர்.

# பழுதடைந்த வீட்டை சரி செய்ய மோரிப்

## சட்டமன்ற உறுப்பினர் நடவடிக்கை



ஷா ஆலம்– பந்திங், கம்போங் கஞ்சோங் டாராட்டில் வசித்து வரும் ஏழை முதியவரின் பழுதடைந்த வீட்டை பழுதுபார்க்க மோரிப் சட்டமன்ற உறுப்பினர் ஹஸ்னுள் பஹாருடின் முன்வந்துள்ளார்.

கடந்த மாதம் 31ஆம் தேதியன்று அப்பகுதியில் கோவிட்-19 உதவிப் பொருள்களை விநியோகம் செய்த போது சஃபுவான் தனுட் (வயது 76) என்ற அந்த முதியவரின் அவல நிலை தமக்கு தெரிய வந்ததாக ஹஸ்னுள் கூறினார்.

மக்கிய நிலையில் உள்ள பலகைகள் மற்றும் சட்டங்களைக் கொண்டு கட்டப்பட்ட அந்த வீட்டை காண நேர்ந்தது. அந்த வீட்டின் அவல நிலை எனக்கு மிகவும் வேதனையை ஏற்படுத்தியது. இவ்வளவு மோசமான சூழலில் வசிக்கக்கூடிய கட்டாயத்தில் மக்கள் இன்னும் இருப்பதை என்னால் நம்ப முடியவில்லை என்றார் அவர்.

கூடிய விரைவில் அந்த வீட்டை புனரமைப்பு செய்து தருவதாக அந்த முதியவரிடம் நாங்கள் வாக்குறுதியளித்தோம். இதைக் கேட்டதும் ஆனந்தப் பெருக்கில் அவரது கண்கள் பனித்தன என்று ஹஸ்னுள் மேலும் சொன்னார்.

கிராமத்தில் செய்யும் சிறு சிறு வேலைகள் மூலம் கிடைக்கும் 300 வெள்ளி மாத வருமானத்தில் அந்த முதியவர் வாழ்க்கை நடத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# கோவிட்-19 உதவி நிதித் திட்டத்திற்கு- மந்திரி புசார் ஒரு மாத சம்பளத்தை வழங்குகிறார்



ஷா ஆலம் – பெருந்தொற்றுக்கு எதிரான போராட்டத்திற்கு உதவும் வகையில் கோவிட்-19 உதவி நிதித் திட்டத்திற்கு சிலாங்கூர் அரசு மீண்டும் புத்துயிரளிக்கவுள்ளது.

இந்த நிதித் திட்டத்திற்கு தனது ஒரு மாத சம்பளத்தை வழங்க பெருமனதுடன் முன்வந்த மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி, வர்த்தக ஸ்தாபனங்களும் அரசு சார்பு நிறுவனங்களும் தங்கள் பங்களிப்பை வழங்க முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

பேரிடர் உதவி நிதிக்கு இன்று மட்டும் 23 லட்சம் வெள்ளி நன்கொடையாக கிடைத்தது என்று நமது சிலாங்கூர் சிறப்பு உதவி நிதித் திட்டத்தை தொடக்கி வைத்த போது அவர் குறிப்பிட்டார்.

இந்த உதவி நிதித் திட்டத்திற்காக மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களின் உயர் அதிகாரிகளின் சம்பளத்தில் பிடித்தம் செய்வது குறித்து தாங்கள் பரிசீலித்து வருவதாகவும் அவர் சொன்னார்.

மாநில அரசு அமல்படுத்தி வரும் 'முழுமையான அரசாங்கம் மற்றும் முழுமையான சமுதாயம் அணுகுமுறையின்' ஒருபகுதியாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்தாண்டில் இந்த உதவித் நிதித் திட்டத்தின் வழி 93 லட்சம் வெள்ளி திரட்டப்பட்டது. அந்த நிதி முன்களப் பணியாளர்கள் மற்றும் மருத்துவத் துறை சார்ந்தவர்களின் நலனுக்கு பயன்படுத்தப்பட்டது.

# டிரக் சேவையின் மூலம் நடமாடும் சிலாங்கூர் வேளாண் சந்தை



ஷா ஆலம்: இங்குள்ள பங்சாபுரி ரிம்பா ஜயாவில் சிலாங்கூர் வேளாண் சந்தை டிரக் சேவையின் மூலம் விற்கப்படும் பொருட்கள் மற்றும் விலைகளின் தரம் குறித்துப் பெரும்பாலான பயனீட்டார்கள் திருப்தி அடைந்துள்ளனர்.

62 வயதான வாடிக்கையாளர் 'பசர் அதான், புதிய பொருட்களான கோழி, இறைச்சி, மீன் மற்றும் காய்கறிகளின் விலைகள் சந்தையை விட மலிவானவை என்பது குடியிருப்பாளர்களுக்கு நிவாரணம் அளிக்கிறது என்கிறார்.

"இத்தகைய ஒரு திட்டத்தின் மூலம், சமூகத்தின் சுமையைக் குறைக்கிறது, ஏனென்றால் அவர்கள் பொருட்களை வாங்குவதற்குக் கூடுதல் செலவுகளைச் செய்ய வேண்டியதில்லை என்றார் அவர்.

சிலாங்கூர் வேளாண் மேம்பாட்டு கழகத்தின் (பி.கே.பி.எஸ்) சிலாங்கூர் வேளாண் சந்தை குறித்த நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், "சூப்பர் மார்க்கெட்டில் கூட்டம் கூட்டாமல், குடியிருப்பாளர்களுக்குத் தங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே, இது போன்ற சந்தை வசதியாக இருப்பதால் , தொண்டு பணியிலான இது போன்ற சந்தைகள் எதிர்காலத்தில் தொடரும் என்று நம்புகிறேன் என்றார்.

இதற்கிடையில், 38 வயதான மொகனா சந்திரா, மொபைல் டிரக் சேவை நிறுத்தப்படுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பே அந்த இடத்திற்குத் தான், வந்த போதிலும் கோழி மற்றும் மீன் வாங்க முடிந்தது என்று கூறினார்.

"நான் சற்றுத் தாமதமாக வந்தேன், நிறையப் பொருட்கள் முடிந்துவிட்டன, ஆனால் அதிர்ஷ்டவசமாக எனக்கு இன்னும் சில உணவு பொருட்கள் உள்ளன.

"விற்பனையாளர் மிகவும் நியாயமான விலையை வழங்குகிறார், இந்தச் சேவை ஒவ்வொரு வாரமும் இங்கே நடக்கும் என்று நான் நம்புகிறேன்," என்று அவர் கூறினார்.

இந்த இயக்கம் நடமாட்ட கட்டுப்பாட்டு ஆணைக் காலத்தில் பொதுமக்களுக்குப் புதிய உணவுப் பொருட்களைப் பெறுவதை எளிதாக்கும் வகையில் பி.கே.பி.எஸ் சிலாங்கூர் நடமாடும் வேளாண் சந்தை டிரக் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

உணவு வாகனங்கள் என்ற கருத்தாக்கத்துடன் விற்பனை திங்கள் கிழமை தவிர ஒவ்வொரு நாளும் காலை 8 மணி முதல் மதியம் 1 மணி வரை அனைத்து மாவட்டங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களுக்குச் செல்லும்.

# வேலையின்மைப் பிரச்னையைத் தீர்ப்பதில் சிலாங்கூர் கெர்ஜாயா திட்டம் உதவி

ஷா ஆலம் – இளையோர் குறிப்பாக கிள்ளான் பள்ளத்தாக்குப் பகுதியில் வசிப்போர் எதிர்நோக்கும் வேலையில்லாப் பிரச்னையைத் தீர்ப்பதில் சிலாங்கூர் கெர்ஜாயா திட்டம் பெரிதும் துணை புரியும் என்று மலேசிய இளைஞர் மன்றத்தின் தலைவர் ஜுபிரி ஜோஹா நம்பிக்கைத் தெரிவித்தார்.

கடந்தாண்டு இரண்டாம் காலாண்டு வரையிலான காலக்கட்டத்தில் 15 முதல் 30 வயது வரையிலான இளையோர் மத்தியில் காணப்பட்ட வேலையில்லாப் பிரச்னை 8.9 விழுக்காடு அதாவது 502,300 ஆக இருந்ததாக அவர் சொன்னார்.

சிலாங்கூர் அரசின் இந்த திட்டம் வேலை தேடும் இளைஞர்களுக்கு குறிப்பாக கிள்ளான் பள்ளத்தாக்கில் வசிப்பவர்களுக்கு மிகுந்த பலனைத் தரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இயங்கலை வாயிலாக நடத்தப்படும் தொழில் திறன் மற்றும் தொழில்நுட்பத்தை அடிப்படையாக கொண்ட நிபுணத்துவ பயிற்சிகள் தொழிலியல் புரட்சி 4.0 இயக்கத்திற்கு ஏற்ப அமைந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

குறுகிய கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் வேலையில்லாப் பிரச்னைக்குத் தீர்வு காணும் நோக்கில் சிலாங்கூர் அரசாங்கம் எனும் அகப்பக்கத்தை நேற்று தொடக்கியது. கோவிட்-19 நோய்த் தொற்று பரவலுக்கு பிந்தைய மூன்றாண்டு காலத்தில் சிலாங்கூர் கெர்ஜாயா திட்டத்தின் வாயிலாக பத்தாயிரம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறியிருந்தார்.

# லெம்பா சுபாங் 1, பி.பி.ஆர். வீடமைப்பு பிரச்னைக்கு தீர்வு காண்பீர்- மத்திய அரசுக்கு கோரிக்கை



பெட்டாலிங் ஜெயா– இங்குள்ள லெம்பா சுபாங் 1. மக்கள் வீடமைப்புத் திட்ட (பி.பி.ஆர்.) குடியிருப்பாளர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வகையில் புதிய பராமரிப்பு குத்தகையாளரை நியமிக்கும்படி வீடமைப்பு மற்றும் ஊராட்சித் துறை அமைச்சு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. பழைய குத்தகையாளரின் ஒப்பந்தம் கடந்தாண்டு இறுதியுடன் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து அந்த குடியிருப்பில் குப்பைகள் அகற்றப்படாதது, கால்வாய்களில் அடைப்பு, அடிப்படை வசதிகளில் பழுது என பல்வேறு பிரச்னைகள் நிலவி வருவதாக ஸ்ரீ செத்தியா சட்டமன்ற உறுப்பினர் ஹலிமி அபு பாக்கார் கூறினார். ஷரிக்காட் இண்ட்ரா ஹர்த்தா சென். பெர்ஹாட் நிறுவனத்தின் பராமரிப்பு குத்தகை ஆண்டு இறுதியில் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து அங்குள்ள எட்டு புளோக்குகளைச் சேர்ந்த சுமார் 6,000 குடியிருப்பாளர்கள் கடுமையான துர்நாற்றத்தை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாக அவர் குறிப்பிட்டார். ஒரு மாத காலமாக மாற்று குத்தகையாளர் நியமிக்கப்படாத காரணத்தால் அப்பகுதியில் நிலைமை கடுமையாகியுள்ளதாகவும் அவர் சொன்னார். இவ்விவகாரம் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரி வீடமைப்பு மற்றும் ஊராட்சித் துறை அமைச்சுக்கு தாம் கடிதம் அனுப்பவுள்ளதாகவும் அவர் கூறினார். இம்மாதத்திற்குள் குத்தகையாளர் நியமிக்கப்படுவார் என நாங்கள் எதிர்பார்த்தோம். எனினும் எந்த மாற்றமும் ஏற்படாத நிலையில் பொதுமக்களிடமிருந்து தொடர்ந்து புகார்கள் வந்தவண்ணம் உள்ளன என்றார் அவர்.

# லெம்பா சுபாங் 1 பி.பி.ஆர். நிர்வாகத்தை சிலாங்கூர் அரசு எடுத்துக் கொள்ளத் தயார்- ரோசியா இஸ்மாயில் தகவல்

பெட்டாலிங் ஜெயா,– திறனற்ற நிர்வாகம் காரணமாக ஆயிரக்கணக்கான குடியிருப்பாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதை கருத்தில் கொண்டு லெம்பா சுபாங் 1, பி.பி.ஆர். மக்கள் குடியிருப்பு பகுதியின் நிர்வாகத்தை எடுத்துக் கொள்ள சிலாங்கூர் அரசு தயாராக உள்ளது.

அந்த குடியிருப்புப் பகுதியின் நிர்வாகம் சிலாங்கூர் மாநில வீடமைப்பு மற்றும் சொத்துடைமை வாரியத்தின் கீழ் கொண்டு வருவதற்கு முன்னர் பல்வேறு நிபந்தனைகள் மீது இரு தரப்பும் இணக்கம்காண வேண்டியுள்ளதாக வீடமைப்பு மற்றும் நகர்ப்புற நல்வாழ்வுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் கூறினார்.


நிர்வாக உரிமையை விட்டுக் கொடுப்பது தொடர்பான மகஜரில் கட்டணத் தீர்வு, வீடுகளை பழுதுபார்ப்பது மற்றும் பராமரிப்பது உள்ளிட்ட அம்சங்கள் இடம் பெற்றுள்ளதாக அவர் சொன்னார்.

இரு தரப்பின் நலனையும் கருத்தில் கொண்டு மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும். பிற்காலத்தில் பிரச்னைகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு ஏதுவாக குத்தகையை ரத்து செய்யும் நடவடிக்கையை முறையாக மேற்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

லெம்பா சுபாங் பி.பி.ஆர். குடியிருப்பாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை நேரில் கண்டறிந்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

திடக்கழிவுகளை அகற்றும் பணியை குத்தகையாளர் முறையாக மேற்கொள்ளாத காரணத்தால் குப்பைக் கூளங்கள் மற்றும் துர்நாற்றத்தால் கடந்த ஐந்தாண்டுகளாக தாங்கள் அவதியுற்று வருவதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்தனர்.

# நகர்ப்புற சிறார்களின் சத்துணவு திட்டத்திற்கு 10 லட்சம் வெள்ளி ஒதுக்கீடு



ஷா ஆலம்– ஏழ்மை நிலையில் உள்ள நகர்ப்புற சிறார்களுக்கு சத்துணவு விநியோகம் செய்யும் திட்டத்திற்கு சிலாங்கூர் அரசு இவ்வாண்டு முன்னுரிமை அளிக்கவுள்ளது. இந்நோக்கத்தின் அடிப்படையில் சிறார் உணவு வங்கித் திட்டத்திற்காக இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தில் 10 லட்சம் வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பில் உள்ள திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட 50 லட்சம் வெள்ளி தவிர்த்து கூடுதலாக ஒதுக்கப்பட்ட நிதி அதுவாகும். ஒன்பது சிறார்களில் ஒருவர் சத்துணவு குறைபாடு பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளதாக ஐ.நா.வின் 2019 ஆம் ஆண்டின் நீடித்த மேம்பாட்டு இலக்கு அறிக்கை கூறுகிறது. சிறார்கள் மத்தியில் காணப்படும் சத்துணவு குறைபாடு பிரச்சினை கவலையளிக்கும் வகையில் உள்ளது என்ற யுனிசெப் அறிக்கை இவ்விவகாரத்தில் நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பலவீனமாகவும் ஒல்லியாகவும் உள்ள சிறார்களை மலிவு விலை அடுக்குமாடி குடியிருப்புகளில் அதிகம் காணமுடிவதாக சுகாதார துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட் கூறினார். கோத்தா டாமன்சாரா பி.பி.ஆர். குடியிருப்பில் மாநில சுகாதார துறை மேற்கொண்ட ஆய்வில் 33 விழுக்காட்டு சிறார்கள் ஊட்டச்சத்து இல்லாத காரணத்தால் பலவீனமாக காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளதாக அவர் சொன்னார். ஆகவே, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் ஆறு வயதுக்குட்பட்ட சிறார்கள் மீது இத்திட்டம் கூடுதல் கவனம் செலுத்தும் என்று அவர் மேலும் தெரிவித்தார். சிறார் சத்துணவு திட்டம் தற்போது ஆய்வு நிலையில் உள்ளதோடு இதன் அமலாக்கம் தொடர்பான அம்சங்கள் குறித்து தொடர்ந்து விவாதிக்கப்படுவதாகவும் அவர் சொன்னார்.

**SELANGOR INDRU**

*Sidang pengarang*

**PENASIHAT**
Lembaga Editorial MSSB

**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar

**KETUA PENGARANG**
A. Pakiyanathan

**JURUGAMBAR**
Asri sapfie,
Raheemie Arifin,
Hafiz Othman & Fikri Yusof

**Aras 11, Menara Bank Rakyat,
No. 1, Jalan Indah 14/ 8,
Seksyen 14, 40000 Shah Alam,
Selangor**
*Tel: 03-55234856*
*Faks:03-55235856*
*Email: info@mediaselangor.com*

# கோவிட்-19 தகவல்களை மறைக்கும் தொழிற்சாலைகளை மூட வேண்டும்
## சிலாங்கூர் அரசு பரிந்துரை



ஷா ஆலம், பிப் 6— கோவிட்-19 நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்ட தங்கள் தொழிலாளர்கள் குறித்த தகவல்களை மறைக்கும் தொழிற்சாலைகளை மூடுவதற்கு சிலாங்கூர் அரசு மத்திய அரசிடம் பரிந்துரைத்துள்ளது. புதிய தொற்று மையங்கள் உருவாக்கம் காண்பதை தடுப்பதற்கு ஏதுவாக நோய்ப் பரவலுக்கு காரணமானவர்கள் என அடையாளம் காணப்படும் தொழிலாளர்கள் அனைவரும் கோவிட்-19 பரிசோதனைக்குட்படுத்தப்பட வேண்டும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். தங்கள் ஊழியர்கள் மத்தியில் காணப்படும் நோய்த் தொற்று தொடர்பான தகவல்களை மறைக்கும் மற்றும் நோயாளிகளை அடையாளம் காணும் முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்க மறுக்கும் தொழிற்சாலைகளை மூடுவது உள்ளிட்ட கடுமையான நடவடிக்கைகள் எடுக்கும்படி மத்திய அரசை நாங்கள் கேட்டுக் கொண்டுள்ளோம் என்று அறிக்கை ஒன்றில் அவர் தெரிவித்தார்.

கடந்த மாதம் 29ஆம் தேதி முதல் கோவிட்-19 நோயாளிகளின் எண்ணிக்கை மூவாயிரத்தை தாண்டும் அளவுக்கு திடீர் உயர்வு கண்டதற்கு சுகாதார அமைச்சின் தகவல் முறையிடம் தாமதமாக தெரிவிக்கப்பட்ட பழைய சம்பவங்களே காரணம் என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

கோவிட்-19 சம்பவங்களின் எண்ணிக்கை கடந்தாண்டு இறுதியிலிருந்து நிலுவையில் இருந்து வருவதாகக் கூறிய அவர், நோய்த் தொற்று கண்டவர்கள் குறித்த தகவல்களை சுகாதார அமைச்சிடம் உடனடியாகத் தெரிவிக்கத் தவறும் தொழிற்சாலைகள் மற்றும் மருத்துவ மையங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பது குறித்தும் மாநில அரசு பரிசீலித்து வருவதாகச் சொன்னார். நோய்த் தாக்கம் அதிகம் உள்ள இடங்களில் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து கருத்துரைத்த அவர், புதிய தொற்று மையங்கள் உருவாகும் சாத்தியம் உள்ள தொழிற்சாலைகளில் கோவிட்-19 பரிசோதனை மேற்கொள்ளவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்றார். இந்த மருத்துவ பரிசோதனை மாநில சுகாதார இலாகா, செல்கேட் கார்ப்ரேஷன் சென். பெர்ஹாட், மலேசிய தொழிற்சாலை உரிமையாளர்கள் சம்மேளனம் மற்றும் ஊராட்சி மன்றங்களின் ஒத்துழைப்புடன் கொள்ளப்படும் என்றார் அவர்.

நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக நடைமுறைகளை மீறும் தொழிற்சாலைகளை மூடுவதற்கான அதிகாரம் மாநில அரசுக்கு வழங்கப்பட வேண்டும் என்று தேசிய பாதுகாப்பு மன்றத்திடம் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக மந்திரி புசார் இம்மாதம் 1ஆம் தேதி கூறியிருந்தார். இவ்விவகாரத்தில் மாநில அரசின் அதிகாரம் வரையறைக்குட்பட்டதாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். நோய்த் தாக்கம் அதிகம் உள்ள மாவட்டங்களான பெட்டாலிங், உலு லங்காட் மற்றும் கோம்பாக்கில் மேலும் அதிகமான கோவிட்-19 மதிப்பீட்டு மையங்களை அமைப்பதற்கும் மாநில அரசு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# வீணாகும் நீரின் அளவைக் குறைக்க
## வெ. 29.3 கோடி ஒதுக்கீடு



ஷா ஆலம்— சுத்திகரிக்கப்பட்ட நீர் எந்த பயனுமின்றி வீணாவதை தடுக்கும் நடவடிக்கைகளுக்காக ஆயர் சிலாங்கூர் நிறுவனம் இவ்வாண்டு 29 கோடியே 30 லட்சம் வெள்ளியை ஒதுக்கியுள்ளது.

கடந்தாண்டில் இதே நோக்கத்திற்காக 25 கோடியே 50 லட்சம் வெள்ளி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக ஆயர் சிலாங்கூர் நிறுவனத்தின் தலைமை செயல் முறை அதிகாரி சுஹாய்மி கமாருள்ஸமான் கூறினார்.

இவ்வாண்டிற்கான ஒதுக்கீட்டில் 17 கோடி வெள்ளி பழைய குழாய்களை மாற்றுவதற்கும் 16 கோடி வெள்ளி பழுதடைந்த மீட்டர்களை மாற்றுவதற்கும் பயன்படுத்தப்படும் என்று அவர் சொன்னார்.

கடந்தாண்டில் 29.7 விழுக்காடாக இருந்த பயனற்று போகும் சுத்திகரிக்கப்பட்ட நீரின் அளவை இவ்வாண்டில் சராசரி 28.6 விழுக்காடாக குறைப்பதில் தாங்கள் வெற்றி கண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை அமலில் இருந்த போதிலும் தேசிய நீர் சேவை ஆணையம் நிர்ணயித்த 29.2 விழுக்காட்டை விட கூடுதலான அடைவு நிலையை நாங்கள் பதிவு செய்துள்ளோம் என்றார் அவர்.

வீணாகும் நீரின் அளவை வரும் 2025 ஆம் ஆண்டில் 25 விழுக்காடாகவும் 2049 ஆம் 15 விழுக்காடாகவும் குறைக்க தாங்கள் இலக்கு நிர்ணயித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# சிலாங்கூரில் மேலும் ஐந்து நெடுஞ்சாலைகள்
## மத்திய அரசின் பரிந்துரை மீது ஆய்வு




ஷா ஆலம்— சிலாங்கூர் மாநிலத்தில் மேலும் ஐந்து நெடுஞ்சாலைகளை அமைப்பது தொடர்பான மத்திய அரசின் பரிந்துரை ஆராயப்பட்டு வருகிறது. இந்த நெடுஞ்சாலைகளை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படும் பட்சத்தில் பொதுமக்கள், சுற்றுசூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் மற்றும் கட்டுமானப் பகுதிகளில் உண்டாகும் போக்குவரத்து நெரிசல் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருவதாக அடிப்படை வசதிகள் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் இஞ்சினியர் இஷாம் ஹஷிம் கூறினார். இத்திட்டங்கள் யாவும் மத்திய அரசினால் மேற்கொள்ளப்படவுள்ளதாக கூறிய அவர், வழித் தடங்களை பரிந்துரைப்பதற்கும் மாநில அரசு நிலையில் இது குறித்து முடிவெடுப்பதற்கும் தங்களை அவர்கள் அணுகியுள்ளதாக தெரிவித்தார். இவ்விவகாரம் தொடர்பில் அனைத்து அம்சங்களையும் நாங்கள் ஆராயவுள்ளோம். சீரான போக்குவரத்துக்கு உதவும் என்பதால் இத்தகைய பரிந்துரைகளை நாங்கள் பொதுவாக நிராகரிப்பதில்லை. எனினும், பிற்காலத்தில் பிரச்னைகள் ஏற்படாமலிருப்பதை உறுதி செய்ய இத்திட்டத்திற்கு கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்படும் என்றார் அவர். இத்திட்டம் ஆற்றுக்கு கடுமையான விளைவுகளையும், மாசுபாட்டையும் ஏற்படுத்தும் என்பதோடு அங்கு குடியிருப்போரையும் அப்புறப்படுத்த வேண்டி வரும் என நாங்கள் அஞ்சுகிறோம். ஆகவே இத்திட்டத்திற்கு அனுமதியளிப்பதற்கு முன்னர் இது குறித்து விரிவான ஆய்வை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றார் அவர்.

# ஊழலில் ஈடுபடுவோர் விரைந்து தண்டிக்கப்பட வேண்டும்
# சிலாங்கூர் சுல்தான் வலியுறுத்து

ஷா ஆலம் – ஊழலில் ஈடுபடுவோர் வலுவான ஆதாரங்களின் அடிப்படையில் நீதிமன்றத்தால் விரைந்து தண்டிக்கப்பட வேண்டும் என்று சிலாங்கூர் சுல்தான் வலியுறுத்தினார். மற்றவர்களுக்கு படிப்பினையாக இருக்கும் பொருட்டு ஊழலில் சிக்கியவர்கள் உடனடியாக தண்டிக்கப்படுவது அவசியம் என்று சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் கூறினார். நாட்டில் நிகழும் ஊழல் சம்பவங்களில் பாதிக்கும் மேற்பட்டவை அரசு ஊழியர்கள் சம்பந்தப்பட்டவை என்று ஊழல் தடுப்பு ஆணையம் கூறியதை கேட்டு தாம் அதிர்ச்சியடைந்ததாக அவர் சொன்னார். ஆகவே, ஊழலை ஒழிக்கும் பணியில் தீவிரமாக செயல்படும்படி ஊழல் தடுப்பு ஆணையத்தை தாம் வலியுறுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார். ஊழலும் அவதூறு பரப்பும் செயல்களும் அதிகரித்து வருகின்றன. நாட்டின் முதன்மை எதிரிகளான இத்தகைய செயல்கள் நாட்டையே அழித்து விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது என்றார் அவர். அரசியல் ரீதியாக நாட்டில் பிளவு ஏற்படுவதற்கும் அனைத்துலக நிலையில் நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுவதற்கும் இவ்விரு செயல்களும் முக்கிய காரணமாக விளங்குவதாகவும் அவர் சொன்னார். இத்தகைய நெறியற்ற செயல்களை தடுப்பதில் நாட்டு மக்கள் முக்கிய பங்கை ஆற்ற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.




## திடீர்த் தேர்தல் வேண்டாம்: ‘உரியவர்களிடம் அதிகாரத்தை ஒப்படையுங்கள்‘- பக்கத்தான் வலியுறுத்து



ஷா ஆலம்– திடீர் தேர்தல் தற்போதைக்கு நடத்தப்படுவதை பக்கத்தான் ஹராப்பான் எனப்படும் நம்பிக்கை கூட்டணி நிராகரித்துள்ளது. மாறாக, அதிகாரத்தை தங்களிடம் திரும்ப ஒப்படைக்கும்படி பெரிக்காத்தான் கூட்டணியை அது வலியுறுத்தியுள்ளது. ஆட்சி நடத்துவதற்கு மக்கள் கடந்த 14வது பொதுத்தேர்தலின் போது வழங்கிய அதிகாரம் வரும் 2023ஆம் ஆண்டு வரை செல்லத்தக்கதாக உள்ளது என்று பக்கத்தான் செயலாளர் மன்றம் கூறியது. 'பொதுத் தேர்தல் குறித்து சதா அறிக்கை வெளியிட்டு வரும் டான்ஸ்ரீ மொகிடின் யாசின் செயல் குறித்து பக்கத்தான் தலைவர் மன்றமும் கேள்வியெழுப்புகிறது. தற்போதைக்கு தேர்தல் நடத்துவது குறித்து மக்கள் சிறிதும் சிந்திக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. கோவிட்–19 பெருந்தொற்று மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கு தீர்வு காண்பதற்கு அரசியல் நிலைத்தன்மையே இப்போதைக்கு அவசியமாகும். ‘ஆகவே, பொதுத் தேர்தல் தேவையில்லை என்ற நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாக உள்ளோம். அதிகாரத்திற்கு யார் உரியவர்களோ அவர்களிடம் அந்த அதிகாரம் உடனடியாக ஒப்படைக்கப்பட வேண்டும்‘ என்று பக்கத்தான் செயலாளர் மன்றம் கூட்டறிக்கை ஒன்றின் வழி வலியுறுத்தியது. அந்த கூட்டறிக்கையில் கெஅடிலான் கட்சியின் டத்தோஸ்ரீ சைபுடின் நசாத்தியோன் இஸ்மாயில், அமானா கட்சியின் டத்தோ டாக்டர் ஹத்தா ரம்லி, ஜசெகவின் லோக் சியு ஃபூக் ஆகியோர் கையெழுத்திட்டிருந்தனர். கோவிட்–19 பெருந்தொற்று தணிந்தவுடன் நாட்டில் 15வது பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று பிரதமர் மொகிடின் யாசின் கடந்த 4ந் தேதி மக்களுக்கு வழங்கிய சிறப்பு உரையின் போது குறிப்பிட்டிருந்தார்.

## தாமான் டெம்ப்ளர் தொகுதி ஏற்பாட்டில் 200 பேருக்கு பெட்ரோல் பற்றுச் சீட்டுகள்

ஷா ஆலம்– தாமான் டெம்ப்ளர் சட்ட மன்றத் தொகுதியில் உணவு பட்டுவாடா தொழிலில் ஈடுபட்டிருக்கும் 200 பேருக்கு தொகுதி ஏற்பாட்டில் பெட்ரோலுக்கான பற்றுச் சீட்டுகள் வழங்கப்பட்டன. 150சி.சி.க்கும் குறைவான சக்தி கொண்ட 200 மோட்டார் சைக்கிள்களுக்கு பற்றுச் சீட்டுகள் வழங்க 1,300 வெள்ளி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சானி ஹம்சா கூறினார். பெட்ரோல் விலை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் ஃபூட் பாண்டா, கிராப் ஃபூட் நிறுவனங்களில் உணவு பட்டுவாடா தொழிலை மேற்கொண்டு வருவோரின் சிரமங்களை கருத்தில் கொண்டு இந்த உதவித் திட்டம் அமல்படுத்தப்படுவதாக அவர் சொன்னார். தொகுதியில் உள்ள அனைத்து மக்களுக்கும் குறிப்பாக, நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக வருமானம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கு அனைத்து விதமான நடவடிக்கைகளையும் தாங்கள் மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட இந்த பெட்ரோல் பற்றுச் சீட்டுகள் வழங்கும் நிகழ்வுக்கு செலாயாங் நாடாளுமன்ற உறுப்பினர் வில்லியம் லியோங் ஜீ கீன் மற்றும் சிலாங்கூர் மாநில அமானா கட்சியின் இளைஞர் பிரிவினர் முழு ஆதரவு வழங்கியதாக அவர் குறிப்பிட்டார்.

## நோய்த் தொற்று பரவலுக்கு காரணமாகும் தொழிற்சாலைகளை மூட அதிகாரம் அளிப்பீர்- சிலாங்கூர் அரசு கோரிக்கை

ஷா ஆலம்– கோவிட்–19 நோய்த் தொற்று பரவலுக்கு காரணமாகும் தொழிற்சாலைகளை மூடுவதற்கு அல்லது முற்றுகையிடுவதற்கு சிலாங்கூர் அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் என்று தேசிய பாதுகாப்பு மன்றத்திடம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுக்கும் விவகாரத்தில் மாநில அரசின் அதிகாரம் வரையறைக்குட்பட்டதாக உள்ளதால் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட தொற்று மையங்களின் உருவாக்கப் பிரச்னைக்குத் உடனடித் தீர்வு காண இயலாத சூழல் ஏற்பட்டுள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். வேலையிடங்களில் நோய்ப் பரவலை துரிதமாக கட்டுப்படுத்துவதில் எங்களுக்கு அனுபவம் உள்ளது. கடந்தாண்டு இறுதியில் கோலாலம்பூர் அனைத்துலக விமான நிலைய சரக்கு கையாளும் பிரிவில் 247 அந்நியத் தொழிலாளர்களை தனிமைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை உதாரணம் காட்டலாம் என்றார் அவர். இவ்விவகாரத்தில் எங்களுக்கு சற்று கூடுதலாக அதிகாரம் வழங்கப்படும் பட்சத்தில் நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை சீராகவும் விரைவாகவும் மேற்கொள்வதற்குரிய வாய்ப்பு ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். தற்போது தொழிற்சாலைகளை மூடுவதற்கான உத்தரவை வெளியிடும் அதிகாரம் மத்திய அரசிடம் மட்டும் உள்ளதாக அவர் மேலும் சொன்னார். நேற்று அஸ்ட்ரோ அவானி தொலைக்காட்சியில் இடம் பெற்ற ‘கோவிட்–19 நோய்த் தொற்றின் அபரிமித அதிகரிப்பை கையாள்வதில் சிலாங்கூரின் வியூகம்‘ எனும் தலைப்பிலான நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்தார்.

# மலேசிய ஹாக்கி லீக் போட்டியை நடத்த ஹாக்கி சம்மேளனம் ஆர்வம்




கோலாலம்பூர் — பொது முடக்க காலத்தில் அரசாங்கம் விளையாட்டுத் துறைக்கு விதிமுறை தளர்வுகளை அறிவித்தால் 2021ஆம் ஆண்டிற்கான மலேசிய ஹாக்கி டி.என்.பி. லீக் போட்டியை நடத்த மலேசிய ஹாக்கி சம்மேளனம் ஆர்வமுடன் உள்ளது. நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காலத்தில் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குத் துறைகளுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு செய்யப்பட்டுள்ள விண்ணப்பத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் எனத் தாங்கள் எதிர்பார்ப்பதாக மலேசிய ஹாக்கி சம்மேளனத்தின் தலைவர் டத்தோஸ்ரீ சுபஹான் கமால் கூறினார். இந்த லீக் கிண்ணப் போட்டி தேசிய சீனியர் விளையாட்டுக் குழு, ஆண்கள் சிறப்புக் திட்டக் குழு மற்றும் மகளிர் குழுக்களுக்கு அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக விளங்குவதாக அவர் சொன்னார். இந்த போட்டி அனைத்து ஹாக்கி விளையாட்டாளர்களுக்கும் உத்வேகத்தையும் சுறுசுறுப்பையும் ஏற்படுத்தும் என்றும் அவர் நம்பிக்கைத் தெரிவித்தார். அனைத்துலக ஹாக்கி போட்டி உள்பட பல்வேறு போட்டிகளை விளையாட்டாளர்கள் எதிர் கொள்வதற்கு இந்த லீக் கிண்ணப் போட்டி சரியான களமாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார். இந்த மலேசிய டி.என்.பி. லீக் கிண்ண ஹாக்கி போட்டியை நடத்துவதன் வழி பல்வேறு அனுகூலங்கள் மலேசிய ஹாக்கி விளையாட்டுத் துறைக்கு கிடைக்கும். விளையாட்டாளர்கள் பொருளாதார ரீதியில் மீட்சி பெறவும் விளையாட்டு ஏற்பாட்டு ஆதரவாளர்கள் நிதியுதவி செய்வதற்கும் வாய்ப்பு ஏற்பட்டு, விளையாட்டுத் துறை புதிய உத்வேகம் பெறும் என்றார் அவர். கடந்த மாதம் 14ஆம் தேதி நடத்த திட்டமிடப்பட்டிருந்த இந்த போட்டி பிரதமர் டான் ஸ்ரீ மொகிதின் யாசினின் நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை தொடர்பான அறிவிப்பு காரணமாக வரும் ஜூலை அல்லது ஆகஸ்டு மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# மலேசிய ஸ்குவாஷ் விளையாட்டாளர் டத்தோ நிக்கோல் டேவிட்டுக்கு சர்வ கால சாதனை விருது



கோலாலம்பூர் — அனைத்துலக நிலையிலான சர்வ கால சாதனை விளையாட்ட்டாளர் விருதினை மலேசிய ஸ்குவாஷ் விளையாட்டு வீராங்கனை நிக்கோல்ஸ் டேவிட் வென்றுள்ளார். சக போட்டியாளர்களான அயர்லாந்தின் ஜேம்ஸ் கோஹூ மற்றும் உக்ரேன் நாட்டின் லர்ஷா சோலோவிவா ஆகியோரை இறுதிச் சுற்றில் தோற்கடித்து அவர் இந்த விருதைப் பெற்றார். இணையம் வழி நடத்தப்பட்ட இப்போட்டிக்கான வாக்களிப்பில் நிக்கோல் டேவிட்டுக்கு 318,945 வாக்குகள் கிடைத்தன. இந்த விருதுக்கு பெயர் முன்மொழியப்பட்ட ஆசியாவின் ஒரே விளையாட்டாளர் நிக்கோல் டேவிட் ஆவார். அவரின் இச்சாதனைக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்ட பிரதமர் டான் ஸ்ரீ மொகிதின் யாசின், எட்டு முறை உலக கிண்ணத்தை வென்றிருக்கும் நிக்கோலின் இந்த மற்றொரு சாதனையை ஒட்டுமொத்த மலேசியர்களுடன் சேர்ந்து தாமும் பெருமிதம் கொள்வதாக கூறியிருக்கிறார். பினாங்கைச் சேர்ந்த 37 வயதுடைய நிக்கோலின் சாதனை நாட்டுக்கு நற்பெயரையும் மலேசியர்களுக்கு உந்துதலையும் ஏற்படுத்தும் என்று நிக்கோலின் பயிற்றுனரும் மலேசிய குவாஷ் விளையாட்டு சங்கத்தின் இயக்குனருமான எஸ். மணியம் தெரிவித்தார்.

# மின்னியல் விளையாட்டு போட்டியின் வழி வெ. 250,000 வெல்ல வாய்ப்பு

ஷா ஆலம்— வரும் மார்ச் மாதம் நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ள Selangor Xtiv Virtual e-Sport எனும் மின்னியல் விளையாட்டு போட்டியில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த பத்து லட்சம் இளைஞர்கள் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. வரும் டிசம்பர் மாதம் வரை பத்து கட்டங்களாக நடைபெறும் இந்த போட்டியில் வெற்றியாளர்களுக்கு 250,000 வெள்ளி வரை பரிசுத் தொகை காத்திருப்பதாக விளையாட்டுத் துறைக்கான ஆட்சிக் குழு உறுப்பினர் கைருடின் ஓத்மான் கூறினார். இயங்கலை வாயிலாக நடைபெறும் அந்த போட்டி Mobile Legends, PlayerUnkown's Battlegrounds (PuBg), Call of Duty, Pro Evolution Soccer (PES21) ,FIFA21 ஆகிய விளையாட்டுகளை உள்ளடக்கியுள்ளதாக அவர் சொன்னார். இம்முறை நடைபெறும் போட்டி திறன் மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கும் அதேவேளையில் மின்னியல் விளையாட்டு மீதான அறிவாற்றலை வளர்க்கவும் உதவும் என்று தெரிவித்தார். இயங்கலை வாயிலாக நிகழ்ச்சிகளை வர்ணனை செய்யும் ஆற்றலை வளர்ப்பதும் அந்த திறன் மேம்பாட்டுத் திட்டத்தில் அடங்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

**Diterbit oleh Media Selangor Sdn Bhd** Aras 11, Menara Bank Rakyat, No. 1, Jalan Indah 13/8, Seksyen 14, 40000 Shah Alam -Dicetak oleh POLARVISTA Sdn.Bhd. 15, Jalan 6/118C, Desa Tun Razak, 56000 Cheras, Kuala Lumpur. Tel: 03-91731434 Fax-03-91731412